தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

[illegible]ள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, வைகாசி 1 (14-5-'60). சனிக்கிழமை | இதழ் 48

காந்தகார்க்காடு!

அடர்ந்து செறிந்த புதர்கள்; ஓங்கி வளர்ந்த மரங்கள்; சுற்றிக் கிடக்கும் கொடிகள்; வளைந்து நீளும் பாதை. கண்ணுக்கெட்டிய மட்டும் ஒரே இருள்; நம்பிக்கையின் ஒளி எங்குமே இல்லை! எங்கு செல்வான்? என்ன செய்வான்?

காற்றினும் கடுகிப் பறந்த குதிரையின் கால்கள், தயங்கித் திணறுகின்றன. காற்றில் அலைந்த அதன் பிடரிமயிர், விழுந்து கிடக்கிறது. அது தன் கால்களையே இழுத்துச் செல்வதற்குத் திண்டாடுகிறது. அவன் வேறு அதன்மீது, செல்லுதல் சரியா?

தவறு! புண் வெடித்த பின்தான், கிருமிகளின் படை எடுப்பை உணர்ந்தான். குதிரை மிகத் தளர்ந்து நொந்த பின்தான், தன் தவறை உணர்ந்தான். தன்னைத்தானே நொந்துகொண்டு கீழிறங்கினான். குதிரைக்கு அப்போதும் தன்னைத்தானே இழுத்துக்கொண்டு செல்லச் சக்தியில்லை. அவன் அதை இழுத்துக்கொண்டு சென்றான்.

நாட்கள் பலவாக அலைந்தும் அவன் நாடிச்செல்லும் இடம் விழிகளில் தென்படவில்லை; வழியில் களைப்பு நீங்கும் வழியும் புலப்படவில்லை. வாழ்வு நீண்டதில்லை. அவன் பயணமோ நீண்டுகொண்டிருந்தது.

அது நம்பிக்கையின் ஒளிதானா? புதிய ஓடை தென்படுகிறதே! கயல் துள்ளும் தெள்ளிய நீர் தெரிகிறதே! எத்தனை துன்பங்கள் இருந்தாலும் இடையே வாழ்வு ஒளி வீசத்தான் செய்கிறது! இல்லையா? அவன் மனம் எல்லைகடந்த மகிழ்ச்சியிலாழ்ந்தது. ஆசை தீர அத்தண்ணீரை அள்ளிக் குடித்தான். புரவியும் தண்ணீரைக் குடித்துவிட்டு கரையிலிருந்த புல்லை மேய்ந்தது. களைப்பும் பசியும் நீங்கிய களிப்பான சேதியைத் தன் கனைப்பின்மூலம் காட்டிக்கொண்டது. அவன் அதைக் கரை ஓரம் கட்டிப் போட்டுவிட்டு, அமைதியாகத் துயிலத் தொடங்கினான். அலைச்சலும் அரைகுறை உணவும் அவனை ஆழ்ந்த தூக்கத்தில் தள்ளின. வீசிய இளந் தென்றல் அவனைத் தாலாட்டியது. சோர்ந்து வீழ்ந்த கால்களில் களைப்பு சேர்த்து வைத்த துன்பங்கள், மறைந்தன. அவன் ஆழ்ந்துகொண்டிருந்தான் கனவுலகில்.

திடீரென்று ஏற்பட்ட இரைச்சல்—குதிரையின் அவலக் கனைப்பும்-சிங்கத்தின் பேரொலியும்-அவனைக்கலக்கியது; பதறி எழுந்தான். அவன் கண்ட காட்சி...

எந்தப் புரவி அவன் வாழ்விலும் தாழ்விலும் அவனுடனேயே அலைந்து கொண்டிருந்ததோ. அந்தப் புரவி பலியாகிக்கொண்டிருந்தது ஒரு சிங்கத்திற்கு. சிந்தை நோகும் கொடுமை!

விரைந்தெழுந்த அவன் தன் வாளால் சிங்கத்தின் பின் கால்களைக் குறி வைத்து வெட்டினான். குதிரையை விட்டுவிட்டு, அவன்மீது பாய்ந்தது சிங்கம்; அவன் துணிச்சலுடன், அதன் கழுத்தைக் குறி வைத்தான். மின் வெட்டுவதுபோல் வாள் இரண்டு முறை பாய்ந்து திரும்பியது; சிங்கத்தின் தலை தொங்கியது. கடைசி மூச்சை விட்டுக்கொண்டிருந்த குதிரையிடம் ஓடினான். அது அவன் மடியில் தலையைப் போட்டது.

சே! விவரம் அறிந்த நாள்முதல் உடன்பழகிய அற்புத நண்பன் பறிபோய்விட்டான். துக்கம் கொத்திக் கிழித்தது. மேலும் அந்தக் கொடுமையைக் காணமுடியாது கால் சென்ற வழி சென்றான். வருத்தமும் துன்பமும் அவனுடன் சென்றன.

பாதை ஒரு புல்வெளியை ஒட்டிச் சென்றது. பசுமை அவன் கண்ணைத் திருப்பியது. வெல்வெட்போல் மின்னிய அப்பசும் வெளியில் ஒரு பெண்மானும், உடன் அதன் இளம்கன்றும் புல் மேய்ந்துகொண்டிருந்தன. மணிப் பூம்பொழிலில் மங்கைநல்லார் நீந்துவதுபோல், புல்வெளியில் அவை மேய்ந்து உலவின.

சற்றுநேரத்திற்குமுன் இறப்புக் கொடுமையைக் கண்டு வந்த அவனுக்கு இது இதமாயிருந்தது. "குதிரையைத்தான் இழந்துவிட்டோம். அதைப் பராமரிப்பதிலே நம் கவலைகளை எல்லாம் இழந்திருந்தோம்! இப்போது தனி வழியே செல்லும் நமக்கு எது துணை? இந்தக் குட்டியைப் பிடித்துச் சென்றால், அதைப் படிப்படியாக வளர்க்கலாம். தனிமையும் அகலும். வளரும் மான் துள்ளி விளையாடும் காட்சி, வறண்ட மனத்திற்கு ஓரளவு இன்பத்தைச் சேர்க்கலாம்!"—இப்படி அவன் மனதிலே ஒரு சலனம்.

புல்தரைக்குள் நுழைந்தான். அந்தக் குட்டியை அப்படியே தூக்கிக் கொஞ்ச வேண்டும் போல இருந்தது; சென்றான். மனிதனைக் கண்டுவிட்டு மருண்ட தாயமான் ஓடியது. குட்டிக்கோ வரும் ஆபத்தை உணரும் திறனில்லை; நின்றது. அவன் அதை அப்படியே தூக்கிக்கொண்டான்; கொஞ்சினான்; முகத்தோடு முகம் சேர்த்துக்கொண்டான். அது அவனது இளந்தாடியை நக்கியது. குதிரையை இழந்த சோகம், பிறந்து நாலைந்து நாட்களே ஆன மானகுட்டியைப் பெற்றதால், ஓரளவு மறைந்தது; நடந்தான். அவனுடன் அமைதியும் இன்பமும் வந்தன.

வெங்கதிர் சாய்ந்தது. மதிமங்கை எட்டிப்பார்க்கத் தொடங்கினாள். அவன் கால்கள் ஓய்ந்தன. குட்டியை முத்தமிட்டவாறே கீழிறக்கி, ஒரு மரத்தடியில் கட்டிவிட்டான். அது அவனை விட்டுப் பிரிய மறுத்தது. விவரந் தெரியாத பருவம், அதற்கு.

தனது இரவு உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினான் அவன். தீ பற்றவைக்கக் காய்ந்த கட்டைகளை உரசிக்கொண்டே, சுற்றுப்புறத்தை நோட்டம் விட்டான். ஒரு மரத்தின் பக்கம் திரும்பிய பார்வை அப்படியே நிலைத்து நின்றது. ஆம்! அங்கே குட்டியை இழந்த தாய்மான் நின்றது. அதன் இரு விழிகளிலும் நீர்வழிந்தது. "என் உயிரை-இதயத்தை-நீ கவர்ந்து வந்துவிட்டனையே! சரியா? என் வாழ்வை-என் கண்மணியை, என்னிடம் தந்துவிடு! கெஞ்சிக் கேட்கிறேன்!" என்று வேண்டுவதுபோலிருந்தது அதன் பார்வை. அவன் திகைத்தான். 'நம் உயிரான குதிரையைச் சிங்கம் கொன்றதற்கு எவ்வளவு வருந்தினோம்! அறிவுள்ள நாமே அப்படி வருந்தினால், இந்த எளிய மான் என்ன பாடுபடும்?' —நெஞ்சத்தில் அலைகள் இப்படிப் புரண்டதும் தலையை உயர்த்தினான். சற்றே முன்வந்து அவன் அருகில் உள்ள குட்டியை நெருங்க வந்த தாய் மான், திரும்பி ஓடியது.

அவலத்தால் கலங்கிய கண்கள் மறுபடியும் கவிழ்ந்தன. மனிதர்கள் உலவும் நாட்டிலே வாழ்க்கையில், அவன் நெஞ்சத்தை இப்படிச் சிந்தனைகள் ஈர்த்ததில்லை. விலங்குகள் வாழும் காட்டில் திரிகையில் அற்புதமான ஆயிரம் சிந்தனைகள் எழுகின்றன. அங்கே பிறக்காத இரக்கமும் மனித உணர்ச்சியும் இங்கே பிறக்கின்றன. முப்போதும் இருக்க வேண்டிய உணர்ச்சிகள், எப்போதாகிலும் எழும் அனுபவங்களால் மட்டும்தான் தூண்டப்பட வேண்டுமா? சரியோ—தவறோ, இப்போது அவன் நெஞ்சில் இரக்கம் கிளைத்தது. எழுந்தான்; கட்டிப் போட்டிருந்த குட்டியை எடுத்து உச்சிமோந்து பின் கீழிறக்கி, தாய் மானருகில் கொண்டுவிட்டான். குட்டிக்கும் அப்போதுதான் தாயின் அருமை தெரிந்ததுபோலும் பிரிவிருந்தால்தான் உறவின் அருமை தெரியுமோ? தாயை ஒட்டிக்கொண்டு ஓடியது இளமான். பார்வை மறையும் தொலைவில் சென்றதும் தாயும் சேயும் திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்றன. தாயின் விழிகளில் ஒளியும் நன்றியும் மிளிர்ந்தன. இளமானின் பார்வைக்கு என்ன பொருள் சொல்வது?

அவன் உள்ளம் முன்னிலும் அமைதியடைந்தது. திடீரென்று தோன்றிய ஓர் ஆசைக்காக ஒரு மானின் வாழ்வையே நொறுக்கிடுவதா? கூடாது; கூடாது! அதன் சுதந்தரத்தைக் கெடுத்து நாம் அடையப் போகும் பயனென்ன? இப்போது அத்தாய் மான் அடையும் மகிழ்ச்சியே, அக்குட்டியை நாம் அடையும் மகிழ்வைவிடப் பெரியது. இந்தப்படி எண்ணங்கள் பெருக்கெடுக்கவும் அவனுள்ளே ஓர் ஆனந்தம் தோன்றியது. மற்ற உயிர்களுக்காக அவன் செய்த உதவி அவனை ஒரு பெரிய தியாகியாக்கிக் காட்டியது; மனம் நிறைந்தது. அவன் வாழ்நாளறியாத ஆனந்தம்கொழித்தது.

— 12-ம் பக்கம் —



முடிவும் விடிவும்

— தென்றல் அநணன் —

ம்பர் 31. காலண்டரில் ஊசலாடிக் காண்டிருந்த அந்த ஒரே ஒரு பேப் ரைப் பார்த்தபடி சிலைபோல சேரில் ய்ந்திருந்தாள் கமலா. அதற்கரு லே சற்றும் அசையாமல், கட்டுக் லையாமல் ஒரு புது காலண்டர் ட்டப்பட்டிருந்தது.

டிசம்பர் 31, காற்றில் படபடவென்று துடித்துக்கொண்டிருந்தது.

இதுபோல எத்தனையோ நாட்களை அவள் இழந்திருக்கிறாள். நாள்தோறும் காலையில் எழுவது, வீட்டு வேலைகளை முடிப்பது, பள்ளிக்கு டிபன் காரியடன் செல்வது, மாலையில் காலி காரியருடன் திரும்புவது, சேரில் படுத்துக்கொண்டு நாவல்கள் படிப்பது, சுவரில் தொங்கும் காலண்டரைப் பார்த்துக் கொண்டே இருப்பது! ஒன்றா, இரண்டா, எத்தனையோ வருடங்கள்! மீனாட்சி பெண்கள் ஆரம்பப் பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியையாகச் சேர்ந்து, இன்று மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியையாயிருக்கிறாள். பதின்மூன்று ஆண்டுகள்!

அவளிடம் படித்த எத்தனையோ மாணவிகள், இன்று கையில் குழந்தையுடன் அவளைக் காண வருகிறார்கள்! கமலாவுக்கு ஆச்சர்யமாக இருக்கும்! நாம் கிழவியாகிவிட்டோமா, இல்லை காண்பது கனவா என்று! நேற்று வரை ஒழுங்காகத் தாவணி கட்டத் தெரியாதவள் இன்று ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தால்...?

எத்தனை வகையான பெண்களை அவள் சந்தித்திருக்கிறாள்.

"நான் திருமணமே செய்துகொள்ள மாட்டேன்! டாக்டருக்குப் படித்து சமூகத் தொண்டு செய்யப் போகிறேன்" என்று சொன்ன இலட்சுமி பத்தாவதுடன் நிறுத்தப்பட்டாள்; திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். ஆனால் ஒருவேளை அவளுடைய விருப்பத்திற்கு விட்டிருந்தால், அவளுடைய எண்ணம் ஈடேறாமலா போயிருக்கும்?

மீனாட்சி ஒரு தினுசு. கலகலவென்று பேசிக்கொண்டே இருப்பாள்; துணிச்சல்காரி! எவ்வளவு துணிச்சலாக "டீச்சர், இந்தக் கடிதத்திற்குப் பதில் எப்படி எழுதுவது" என்று கேட்டாள்! அது ஒரு காதல் கடிதம்!

பதினைந்து வயதுகூட நிரம்பாத பெண். அவளைக் கண்டிக்கவும் முடியவில்லை. 'அவன் யார்?' என்று கேட்டாள். "சுந்தரம்" என்று மிகவும் நாணத்துடன் சொன்னாள். என்னைப் போல ஒரு உபாத்தியாயினி மகன் அவன். கவர்ச்சியான பையன். இந்தப் பெண்ணினுடைய வீட்டில் அவனுடைய அப்பா கணக்குப்பிள்ளையாம்! "இந்தக் காதல் நிறைவேறாது. காதல் என்பதெல்லாம் இனிய கனவுகள்!" என்று அவளிடம் சொல்ல நினைத்தாள். ஆனால் பூரித்து வளரும் கொடி அகப்பட்ட கொழுகொம்பின் மேல் பற்றிப் படர்வதுபோல், மலரும் பருவத்தில் கண்களில் புகுந்த ஒரு தோழனை, கண்ணோடு மூடிக்கொண்டு கனவு காணும் அந்தச் சிறு மனதில் ஓர் அடி அடிக்க நான் விரும்பவில்லை. மென்மையான மலர் அவள். ஒரு சிறு தட்டைக் கூடத் தாங்கமாட்டாள் என்பது அவளுக்குத் தெரியாதா? ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் அந்தப் பெண்ணுக்கும், அவளுக்கு ஒத்ததகுதியுள்ள ஒரு பையனுக்கும் இந்த ஊரே வியக்கத்தக்க அளவுக்குத் திருமணம் நடந்தேறியது.

இது போன்ற பல 'உலக நாடகக் காட்சிகளை' அனுபவ உருவத்தில் கண்டபின்பு தான்கமலாவுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. எல்லோரும் சொன்னது தான்; பழையது தான்! ஆனால் அதை உணரும் போது தானே அதன் உண்மை நம் மனதுக்குப் படுகிறது. இல்லாவிட்டால் கண்ணோடு காட்சியாக மறைந்துவிடுகிறதே!

உலகம் ஒரு நாடக மேடையானால், பெண்கள் அந்த நாடகத்தில் திரைச் சீலைகளாகத் தானே பெரும்பாலும் பயன்படுகிறார்கள். அவர்களுக்கென்று ஆசைகளோ, உரிமையோ, குறிக்கோளோ, கடமையோ, ஏதுவும் கிடையாது. அதைப் பெற முயலுகிறவர்கள் வாழ்வை இழந்து, கமலாவைப்போல் நடமாடும் பிணமாகத்தானே இருக்க வேண்டியிருக்கிறது? ஆண்கள் பெண்களை "தெய்வம்! தெய்வம்!" என்று போற்றிப் புகழ்வதெல்லாம், அந்தத் தெய்வம் எழுந்து நடமாடிவிடக்கூடாது என்பதற்காகத்தான்! தெய்வம் எழுந்து நடமாட ஆரம்பித்தால், அதைத் தெய்வம் என்று ஒப்புக்கொள்வார்களா? மனிதர் தொகையிலும் சேர்க்காமல், தெய்வ வகையிலும் சேர்க்காமல் ஒதுக்கிவிடுகிறார்கள். - இதையெல்லாம் இப்போது யோசித்து என்ன பயன்?

கண்களில் துளிர்த்த நீரை, கண்ணாடியை எடுத்துவிட்டுத் துடைத்துக் கொண்டாள் கமலா! அவளுடைய மங்கிய பார்வைக்கு, ஒளி மறைந்து இருள் மூட ஆரம்பித்திருந்த உலகம் பயங்கரமாகத் தோன்றியது! எழுந்து சுவிட்சைத் தட்டினாள். அறையெங்கும் ஒளி பரவியது. மன இருளைப் போக்க, இதுபோல எந்த ஒரு விசையுமில்லையே!

காலம் செல்லச் செல்லப் பல நினைவுகள் மங்கி மறைந்துவிடுகின்றன, ஆனால் ஒரு சில வடுக்கள், வளர்ந்து கொண்டே வருவதும் உண்டும். கமலாவிற்கு. தன் கணவனைவிட்டுப் பிரிந்தது முதலில் தவறாகத் தோன்றவில்லை. பிறகு எளிதாக தோன்றியது. ஆனால் நாளாக நாளாக நாம் தவறு செய்துவிட்டோம், நாம் தவறு செய்து விட்டோம் என்ற எண்ணம் அவளை அரிக்க ஆரம்பித்தது. மயக்கத்திலும், கலக்கத்திலுமே அவள் வாழ்வு தேய்ந்தது. சிந்தனைகளிலும்,கடமைகளிலுமே அவள் தினப்பொழுது செல்கிறது. மழையிலும் வெய்யிலிலும் மாறி மாறித் தோய்ந்ததனால் மரத்துவிட்டது அவளுடைய உள்ளம். ஆனால் விந்தையான ஓர் ஆவல், ஆசை அவளுடைய உள்ளத்தில் கொளுந்துவிட்டு எரியத் தொடங்கியது. தன் கணவனை எப்படியாவது சந்தித்து, அவர் காலில் விழுந்து காலைக் கட்டிக்கொண்டு அழுது புலம்ப வேண்டுமென்ற ஆசை! இது முதலில் தோன்றியபோது "சே! வடிகட்டிய கோழைத்தனம் சரியாகவோ தவறாகவோ, எடுத்துக்கொண்ட உறுதியை இது நாள்வரை நிறைவேற்றி விட்டுக் கடைசியில் சரணடைவதா?" என்ற எண்ணமும் தோன்றிற்று. ஆனால் அதன் பிறகு அப்படிச் செய்யாவிட்டால் தனக்கு நெஞ்ச நிறைவே இல்லை என்று அவளுடைய உள்ளம் அலறத் தொடங்கியது.

சாதாரணத் தவறுதான். ஆனால் அனுபவித்த கொடும் தண்டனை, அந்தத் தவறை மிகப் பெரிதாக்கிக் காட்டி அவளை அலைக்கழித்தது.

'பி. ஏ.' படித்த அனாதைப் பெண் கமலாவை, பள்ளி இறுதி வகுப்பில் "பல்டி" அடித்த செந்திலுக்குத் திருமணம் செய்து வைத்தார், அவளை வளர்த்த அவளுடைய சித்தப்பா. இதைப் பெரிதாக நினைக்கவில்லை யாரும்! ஆனால் மணமகனும் மணமகளும் நினைத்தார்கள். செந்திலுக்குத் தன் மனைவி தன்னைவிடப் படித்தவள் என்ற குறுகுறுப்பு; அவளுக்கு மமதை. அந்தச் சமயத்தில் நாட்டில் பேச்சாளர்களுடைய மூச்சிலெல்லாம் பெண்களே இருந்தார்கள். தலைகால் தெரியாமல் பலர் அமிழ்ந்துகொண்டிருந்த நேரம், அது.

செந்தில் ஒரு சிறு உரிமையையும் அவளுக்கு விட்டுக் கொடுக்க மறுத்தான்; பயந்தான்; எங்கே தன்னை அவள் மீறிவிடுவாளோ என்று! இது சும்மா இருந்த கமலாவை அறைகூவுவது போலிருந்தது, கொஞ்சம் அமைதியாகச் சிந்தித்திருந்தாளானால், தன் கணவனுடைய அறியாமையை அன்பால் போக்கி இருக்கலாம், ஆனால் அவள் செந்திலுக்குக் கோபமூட்டி, அவன் துள்ளுவதைக் கண்டு ஆனந்தப்படத் தொடங்கினாள். நெருப்புடன் விளையாடுகிறோம் என்று தெரியாமல்!

"ஆமா! உங்களுக்கு எந்த பாடத்திலே அவுட்டு? ஒரு தடவையா? இரண்டுதடவையா?" என்பாள். அவன் முறைத்துப் பார்த்துவிட்டுப் பேசாமல் போய்விடுவான்.

"நேற்று நான் 'ஒடிய'னுக்குப் போயிருந்தேன். நல்ல படம். உங்களைக் கூட்டிக்கொண்டு போயிருப்பேன். ஆனால் ஆங்கிலம் புரியாதே என்றுதான் கூப்பிடவில்லை!" என்றாள் ஒரு நாள்.

"ஆமாம்! பெரிய துரைச்சாணி. மூஞ்சியையும் முகரையையும் பார்! இனிமேல் என்னைக் கேட்காமல் போய்ப் பார்! காலை ஒடித்துவிடுகிறேன்!" என்று பொரிந்து தள்ளினான் செந்தில்.

பிளவு இப்படியே வளர்ந்து கொண்டே வந்தது.

ஒரு நாள் கமலா, கையில் ஓர் உத்திரவுத் தாளோடு வந்து "அத்தான்! எனக்கு வேலை கிடைத்துவிட்டது. அடுத்த மாதத்திலிருந்து எனக்கு மாதம் 125 ரு சப்பளம். நல்ல வேலை!" அன்று சொல்லிக்கொண்டு போனாள். செந்திலின் அதட்டல் அவளை உலுக்கி எடுத்துவிட்டது. "நீ வேலைக்குப் போக முடிவு பண்ணினால், இந்த வீட்டில் இருக்கும் எண்ணத்தை விட்டுவிடு. நீ வேலைக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை!" என்றான்.

இருவரும் சூடாக விவாதமிடத் தொடங்கினர்.

'ஏனில்லை? இங்கே என்ன சொத்து, கொட்டிக் கிடக்கிறது...?'

'பத்தாயிரம் ரூபாய் ரொக்கமிருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் நகை இருக்கிறது. வீடு இருக்கிறது. நிலம் இருக்கிறது. வேறென்ன வேண்டும்?'

"இது எத்தனை ஆண்டுகளுக்கு போதும். நாளைக்கு நமக்கு நாலு குழந்தைகள் பிறந்தால், ஐந்து ஆண்டிற்குள் வீட்டையும் நிலத்தையும் கூட விற்கவேண்டும்!"

"அதைப் பற்றி உனக்கென்ன கவலை? குடும்பத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பு ஆண்களுக்குத்தான்."

"ஆனால், அவர்களால் முடியாவிட்டால் பெண்கள்தானே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும்? வீட்டிற்கு ஒருவர் சம்பாதிக்கவேண்டும். இங்கு நான் சம்பாதிக்கிறேன். இதில் தவறென்ன?'

ஒவ்வொரு வார்த்தையும் அவனை நேரடியாகவே தாக்கின. அவளும் நிறுத்தவில்லை.

"நீங்கள் வேலைக்குப் போகப் போகிறீகளா?"

"... ... ..."

"இல்லை இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு தொழில் செய்யப் போகிறீர்களா?"

"... ... ..."

"இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தச் சொத்துக்கள் கரைந்து போய் விட்டால் எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவீர்கள்? தோள் கொடுத்துத் தூக்கி நிறுத்துவீர்களா? இந்தக் காலத்தில் வேலை கிடைப்பதே அரிதாக இருக்கிறது..."

அவளை மேலே பேச விடவில்லை செந்தில். அவளுடைய வார்த்தைகளின் வெப்பத்தில், கொந்தளித்துக்கொண்டிருந்தவன் தன்னை மறந்து அவள் கூந்தலைப் பற்றி இழுத்தான். அவன் அவளை அடித்த அடியைப் பார்த்தவர்கூட மயக்கம் போட்டுவிழுவார்கள். அவளைச் சுவரோடு தள்ளிவிட்டு வெளியேறிய செந்தில் பத்துநாள் கழித்து வீடு திரும்பினான். ஆனால் அதற்குள் அவள் வெளியேறிவிட்டாள்.

★

மணி பன்னிரண்டு அடித்தது. கண்களில் பொங்கிவந்த நீரைத் துடைத்துக்கொண்டு எழுந்தாள் கமலா! கொஞ்சம் பசியெடுப்பதுபோல் தோன்றியதும் அவளுக்குப் பால் ஞாபகம் வந்தது. அடுப்பைப் பற்ற வைத்துப் பாலைக் காய்ச்சினாள். சாப்பிட்டாள்.

நாளை ஊருக்குப் போய் எப்படியும் கணவனின் காலில் விழுந்து தன் வாழ்வைக் கரையேற்ற வேண்டும் என்று முடிவுகொண்டாள். அப்பொழுதே அமர்ந்து ஒரு வார விடுமுறைக்கும் கடுதாசி எழுதினாள். பிறகு-சுவரில் தொங்கிய 31-ஐக் கிழித்துவிட்டு அந்த இடத்தில் புத்தாண்டுக் காலண்டரை மாட்டினாள்.

★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 14-5-'60 ‖ இதழ் 48

சதிராடும் கருநாகம்! புன்னகைக்கும் குள்ளநரி!

சமுதாயத்தின்மேல் மட்டத்தைத் தங்கள் திருமேனிகளால் அலங்கரிக்கும் சீமான்கள், இப்போது புதுச் சிந்து பாடுகிருர்கள்!

பதவி, போதைப் பொருள். அதை உண்ட பெரு மயக்கத்தில் ஆடி அலேகின்றனர், அந்தப் பொன்மேனிப் பெருமக்கள்!

நாளும் வளர்ந்துவரும் நவநவமான எண்ணங்களே அவர்கள் மதிக்க மறுக்கிருர்கள்!

இதயத்துக்கு இதயம் அலேபாய்ந்துவரும் புதுமைக் கருத்தலேகளே அவர்கள் பார்க்கவும் மறுக்கிருர்கள்,

கொடுமை கொடிகட்டிப் பறக்கிறது. கோணல் வழி நீண்டு செல்கிறது. அட்டகாசமும் ஆணவமும் தோளோடுதோள் சேர்த்து நின்று, பண்பையும் அறிவையும் பழிக்கின்றன! எத்தனே எத்தனே தீய வழிகள் உண்டோ, அத்தனேயும் கூடிவிட்டன; முத்தனேய செந்தமிழை, மூத்தகுடி வழி வழியை, முன்னிற்கும் தன்மானத்தைப் பார்த்து எக்காளமிடுகின்றன!

மாடர்ன் மன்மதர் முதற்கொண்டு கோவைச்சீமான் வரை தமது பழைய கருத்தை, புதிய இசையில் பாடுகின்றனர். கைக்கூலிகள் கிடைத்ததால் நிலேகுலேந்து ஆடுகின்றனர் இருவரும். எதைச் சொல்லி, யாரை நோவது?

கொலேகாரர்கள் கையில் ஆட்சி கிடைத்தால், நாட்டில் அமைதியா தவழும்?

வணிகன் அரசுக் கட்டிலேறிஞல், சுரண்டல் புத்திதானே வளரும்?

இந்தக் காங்கிரசார் ஆட்சியிலமர்ந்தால் நல்லனவா நடக்கும்?

அரசியலில் அறிமுகமான நாளிலிருந்து ஆட்சி பீடமேறிய இன்றுவரை அவர்களிருவரும் வாய் திறந்தால் நாற்றம்தான் அடிக்கிறது. அதில் புதுவகையில் கிளம்பியுள்ள நாற்றம் சினிமா நாற்றம்!

நான்கு நடிகர்கள் வீட்டு வாசலில் காவல் கிடந்து, ஒன்றரை நடிகர்களேப் பிடித்துவிட்ட துணிச்சலில் துள்ளு துள்ளென்று துள்ளுகின்றனர்,

திராவிடரின் திட்டவட்டமான வேலேகள் அத்துணேயும் கலகலத்து வீழ்ந்துவிட்டதுபோல் கருதிக்கொண்டு, "சினிமாவில்மட்டும் 'திராவிடப் பொன்னுடே' என்று பாடினுல் போதுமா?" என்கிறதாம் ஓர் உருவம்.

உதியன் பருத்து உத்திரத்துக்கு ஆவதில்லே; சில பிறவிகள் நெடுக வளர்ந்தும் ஒன்றுக்கும் ஆவதில்லே!

சினிமாவில் மட்டுந்தானு திராவிடப் பொன்னுடு வருகிறது? உமது நாட்டு வாழ்த்துப் பாடலிலும் திராவிடத்தின் வெற்றி முழக்கம் கேட்கிறதே! அதை என்ன செய்ய நினேப்பு? அதைக் கிண்டல் செய்யும் துணிச்சல் உண்டா? எங்கே அந்த வீரம்?"

அடுத்த பிறவி கேட்டிருக்கிறது, வளமார் திராவிடத் தோழர்கள் தயாரித்த மற்ருெரு திரையோவியம்பற்றி!

"மலேயாளிகளிடம் மன மாறுதல் உண்டாக்க உங்கள் நாடோடி மன்னனே அனுப்ப முயல்வதுதானே!"-தன் சிங்கார வாய் திறந்து கொண்டு இச்சீமான் சிந்திய தேன் மொழிகள், எவ்வளவு வேடிக்கையாயிருக்கின்றன! காங்கிரசு அமைச்சர்கள் மண்டையில் இருந்துதான் இப்படி அறிவுக் கற்றைகள் புறப்பட முடியும்!

"திரைப்படத்தின் மூலமாகக் கருத்தைத் திருப்பிவிட முடியுமா?"

மதத்துறையில்-அரசியல் துறையில்-கலேப்பண்பு வழியில்-பண்பாட்டு வளர்ச்சியில் திரைக்கலேயும் செய்திருக்கும் சேவை கொஞ்ச நஞ்சமில்லே. இன்னும் ஆயிரமாயிரம் மாற்றங்களேக் கலேகள் சாதிக்கின்றன என்ருல், அவற்றுள் பல்லாயிரம் மாற்றங்களேத் திரைக்கலே சாதித்திருக்கிறது; மறக்க வேண்டாம்.

இரண்டு அமைச்சர்களுக்கும் இவற்றைச் சொல்வோம். திராவிடப் பொன்னுடு கலேந்த கனவில்லே! இப்போதைக்குத் திரைப் படத்தை அனுப்பாமலே, மலேஞாலத்தில் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடுகிறது. மலேத் தோட்டங்களிலும், திருவனந்தை மாநகரத்திலும் ஆற்றல் மறவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். காலம் வர வர, வளரும் கழகம்! அப்போது வரப் போகிறது திராவிட உலகம்!

சதிராடும் கருநாகங்களே! புன்னகைக்கும் குள்ளநரிகளே! இப்போதே தேடுங்கள், திராவிடம் அமையும் நாளில் ஓடி ஒளிந்துகொள்வதற்கான மூலே முடுக்குகளே!

★

இப்படிப் பிறந்ததோ?

வேங்கி நாட்டரசன் வீரசிம்மன், வீரத்தாலும் தீரத்தாலும் வாகைமாலே சூடியவன். விண்ணும், மண்ணும் வியக்கும் திண்தோள் வீரன். அவனுக்கோர் மகள் உண்டு அவளின் பெயர் முல்லே. அவளோ இன் சொல்லின் இலக்கணம்; எழிற்கோர் எல்லே; அம்முல்லேக்கீடு யாருமேயில்லே என்ருலும் மிகையும் இல்லே. தன்னுயிர், உடல், எல்லாம் மகளேதான். என்று அன்புடன் வளர்த்து வந்தான். காரணம், முல்லே பிறந்த சில தினங்களிலே தன் தாயை இழந்தவள். அன்றிலிருந்து அவனே அவளுக்குத் தாயாகவும், தந்தையாகவும், பாசத்தைக் கொட்டி, தன் கண்ணேக் காக்கும் இமைபோல் பெண்ணேக் காத்தான், மண்ணேக் காக்கும் மன்னன். முன்னேவிடப் பன்மடங்கு அறிவாலும், ஆற்றலாலும், அழகாலும், ஏற்றமான அவளும் வேண்டாதவைகளேத் தீண்டவே மாட்டாள். அப்படிப்பட்ட முல்லே ஓர் நாள்...

"அப்பா இன்று நானும் தோழிகளும் மலேயோரம் விளேயாடி வர எங்களுக்கு விடை தாருங்கள்!" என்ருள். முல்லேயின் முகம் நோக்கியபடி "மகளே; உன் விருப்பப்படியே சென்று வா! ஆனுல் விரைவில் வந்துவிடுங்கள்!" என்ருன். மகள் தந்தையிடம் அன்புடன் விடைபெற்றபடி ஓடுகிருள். மகள் சென்ற வழியே பார்த்திருந்தான். அவன் கண்களில் நீர் மல்கி வழிந்தோடி உதட்டில் உறைத்தது. அப்பொழுதுதான் தன் கண்ணில் நீர் மல்கியது என்ற உணர்வு அவனுக்குத் தோன்றியது. மகளின் எதிர்கால வாழ்வை நினேத்துத் தன் எண்ண அலேகளேச் சிதறவிட்டுக்கொண்டிருந்தான.

முல்லேயும் தோழிகளும் எல்லேயில்லா மலேயழகைக் கண்டு களித்தவண்ணம், விளேயாடிக்கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் விளேயாடிய களேப்புத் தீர ஆற்ருேரம் அமர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், கலேமான்கள் கூட்டம் கலேயாது திரிவதையும், தழையும், கொம்புமாக ஒன்றிற்கொன்று துணேயாக ஓங்கி வளர்ந்திருப்பதையும் கண்டு மகிழ்ந்தனர். ஆனுல் ஒற்றுமையற்ற மக்களேயும், உள்ளப் பொருமை கொணடவர்களேயும் நினேந்து வருந்தினர். அப்பொழுது இணேயாக ஓடியாடிய மான்களில் ஒன்று வலேயில் அகப்பட்டுக்கொள்கிறது. இதைக் கண்ட முல்லே ஓடுகிருள் மானே விடுவிக்க. மானே விடுவிக்கச் சென்ற மான்விழியாளே நோக்கி வேங்கை ஒன்று பாய்ந்து வருகிறது. மானேக் காப்பாற்றச் சென்ற அவளேக் காப்பாற்ற ஆளில்லாமல் அலறுகிருள். நாட்டு மக்களின் வாட்டம் போக்கிடும் வேந்தன் மகள், காட்டில் வாழும் கொடிய வேங்கைக்கு இரையாகப் போகும் நேரம் "அப்பா" என்று கதறுகிருள். அவ்வேளே தவருமல் வேங்கையின் மார்பில் கணேயொன்று பாய்ந்தது. முல்லே ஓடுகிருள். ஓடி வந்த பதட்டத்துடன ஒரு வீரன மார்பில் மோதி "வேங்கை! வேங்கை!" என்ருள.

வீரன் சிரித்தபடி சொல்கிருன், "பெண்ணே! கவலேவிடு! வேங்கையோடு விளேயாட நினேத்தேன, ஆனுல் உன் நிலே விபரீதமாகிவிடும் என்றுதான். இங்கிருந்தே கணேயைத் தொடுத்தேன். வேங்கை வீழ்ந்து மடிந்துவிட்டது. இனி அச்சம் வேண்டாம். ஆமாம், நீ யார்?" என்று இதற்குள் தோழிகளும் வந்துவிட்டார்கள். வீரனுக்கு நன்றி தெரிவித்துவிட்டு வந்த வழியே செல்லுகிருர்கள். முல்லே சென்ற வழியை நோக்கியபடி தனக்குள்ளே இதைச் சொல்லுகிருன். "கனத்த குழையணிந்த இவள் யார்? அழகான மயிலோ!! மனிதப் பெண்ணே!!! என்கிருன். இக்காட்சியை வள்ளுவர் தருகிருர்; படியுங்கள்.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

இப்படி ஒரு காட்சி நிகழக் கண்டு, அந்த நினேவிலேயே வள்ளுவர் பாடியிருப்பாரோ?

புலவர்கள் நடந்த நிகழ்ச்சிகளுக்குத் தானே கற்பனே மெருகுபூசி, கவிதை படைக்கிருர்கள்!

—காரை-கணேசன்.

மௌனகுரு காமராசர் வாய்திறந்ததும் எவராலே? நாவில்லாக் காங்கிரசார் நடுங்குவதும் யாராலே?

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்தில் இடம் பெற்ற பிறகு புதிதாக எதையும் சாதித்து விடவில்லை. "உருப்படியான ஆய்வுரைகள் எதனையும் எடுத்துக்கூறவில்லை; அடுக்குமொழி பேசித் தடுக்க நினைக்கிறார்கள்; சரியான எதிர்க்கட்சியாக இயங்கத் தெரியவில்லை!" என்றெல்லாம் ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சிகளிலே இடம்பெற்றுள்ள ஏனைய கட்சியினரும் வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் வாயைத் திறக்கத் தவறுவதில்லை. முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்கள் சென்னை சட்டமன்றத்திலே இடம்பெறாத முன்னைய நாட்களில் நடைபெறாத நல்ல செய்திகளையெல்லாம் நம்முடைய மாற்றார்களும் ஒப்புக்கொள்ளும் வகையில் கழக உறுப்பினர்கள் சட்டமன்றத்து ஏடுகளில் பதியவைத்திருக்கிறார்கள். இன்றைக்குச் சட்டமன்றத்திலே தாயகப் பற்றும் தமிழ்மொழிப் பற்றும் தழைத்தோங்கியிருப்பதற்குத் தக்க பங்கேற்றவர்கள் கழகத்தவரே என்பதை எல்லோரும் ஒப்புவர். இதன் அருமை பெருமைகளைச் சிறு குணம் படைத்தோர் தவிர ஏனையோரெல்லாம் கடந்த காலச் சட்டமன்றங்களுடன் ஒப்பிட்டு நோக்கினால் அறிந்து கொள்ள முடியும். 1946லிருந்து 1956 முடிய பலப்பல விசித்திர மனிதர்களையெல்லாம் சென்னை மாநிலத்துச் சட்டமன்றம் சந்தித்துவிட்டது. குறட்டைவிடுவதையும், நிலக்கடலை தின்பதையும் பெரிய பிரச்னையாக்கிப் பேசியவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். சட்டசபைக் கட்சித்தலைவர் தேர்தல் வருகிறதென்றால் காங்கிரசுக்காரர்கள் நூற்றுக்கு நூறுபகுதி காங்கிரசுக்காரர்களாகவே இருந்ததில்லை! பிரகாசம் அமைச்சரவை பீடத்திலேயிருந்தது; திடீரென்று ஒருநாள் அடிதளர்ந்து கவிழ்ந்தது. காங்கிரசுக்காரர்களே காங்கிரசு அமைச்சரவையைக் கவிழ்த்தனர். அப்போதெல்லாம் பதவிப் பிரச்னையே தவிர நாடு, மொழி, மக்கள், இவைகளைச் சுற்றி வளர்ந்து வரவேண்டிய நலன்கள், நலன்களைக் காத்து வளர்க்க வேண்டிய கடமைகள், அவர்கள் இதயத்திலே இடம் பெற்றதில்லை! பிரகாசத்திற்குப் பிறகு ஓ. பி. இராமசாமியார் முதலமைச்சரானார்–காந்தீயவாதி – கிருத்திகை விரதமிருப்பவர் நாடாள வந்தவர்களில் நல்லவர் என்ற நற்பெயரை நாட்டுமக்களிடத்திலே பெற்றுக் கொண்டவர்! அவரைக் கவிழ்த்துவிட எதிர்க்கட்சிகள் அல்ல; காங்கிரசுக்காரர்களே கட்டியம் கூறிப் பட்டயம் கட்டிப் படை திரட்டினர்! முதலாண்டு முடிந்தவுடன் முதலமைச்சர் பதவிக்கான தேர்தலில் கடுமையான போட்டியினை உருவாக்கினர். ஓ. பி. இராமசாமி அவர்களுக்குப் போட்டியாக போலீசு மந்திரியாக இருந்த சுப்பராயனே வந்தார். காமராசர் ஓமந்தூராரையும், ஆச்சாரியார் டாக்டரையும் மறைமுகமாக ஆதரித்த கடும் சண்டையில் ஓமந்தூரார் வெற்றிபெற்றார்; எதிர்த்தோர் வெட்கித் தலை குனிந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், சட்டமன்றத்தைப் பதவி வேட்டைக் களமாக்குவதை அன்றே கண்டித்தது. அந்த நாட்களில் காங்கிரசுக்காரர்கள் தங்களின் பேராசையைப் பதவியிலே இழைத்து வைத்திருந்தார்கள். ஓ. பி. இராமசாமியார் தோற்கடிக்கப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் சதிகள் செய்து வேலை செய்தனர். தேர்தல் முடிந்தவுடன் சட்ட சபைக்குள்ளேயே 'பார்ப்பனர்கள் ஒழிக' என்று காங்கிரசுக்காரர்களே கூறினர். 'தாடி வைக்காத ராமசாமி' என்ற மகுடமிட்டு ஓ. பி. ஆர். அவர்களைக் கூட அழைத்தார்கள்! தமிழ்நாட்டின் நலன்களையும் மக்களின் தேவைகளையும் மதிப்பதைக் காட்டிலும் தங்களுடைய ஆதிக்கப் படைபலத்தையே பெரிதாக்கிக்கொண்டார்கள்! எதிர்க் கட்சியினரும் இல்லாத வேளை அது! கம்யூனிஸ்ட்கள் இருவர் மட்டுமே இருந்தனர்! ஓமந்தூரார் நேர்மையின் வழிச் சென்றார். காங்கிரசுக் காலிகளால் கொல்லப்பட்ட உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் கொலை வழக்கினைப் புது விசாரணைக்கு உத்தரவிட்டார். சட்ட சபை உறுப்பினர்களுக்கு, அதுவும் குறிப்பாக தன்னுடைய கட்சியினைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்களுக்குக் கண்டிப்பாகப் பேட்டி தருவதற்கு மறுத்துவிட்டார்! இவைகளையெல்லாம் காரணமாகவைததுத்தான் அவரைத் தொலைக்கத் துணிந்தார்கள்! ஓ பி. இராமசாமியார் சதிகளை முறியடித்தவுடன், டாக்டர் சுப்பராயன் அவர்களிடத்திலேயிருந்த காவல்துறை பொறுப்பினைத் தாமே ஏற்றுக் கொள்ளப் போவதாக அறிவித்தார் அதிகார டாக்டருக்கு அவமானமாகிவிட்டதாம். உடனே அமைச்சர் பதவியை விட்டு விலகிக்கொண்டார்! 'கருஞ்சட்டைப் படை'யை தடை செய்வதற்கும் கழகத்தவர்களைச் சிறையில் அடைத்து மகிழ்வதற்கும் அவர் செய்த பல முயற்சிகள் திராவிட இயக்கத்தவராலே என்றும் மறக்கமுடியாதவைகள்! இறுதியில் ஒரு நாள் இராமசாமியாரும் கவிழ்க்கப்பட்டார்–கவிழ்க்கப்பட்ட நேரத்திற்கு முன்பாகவே தன்னால் சமாளிக்கமுடியாத நிலை தெரிந்து போட்டிக் காங்கிரசுக்காரர்களின் குமாரசாமி ராசாவுக்கு வழிவிட்டு விலகிக்கொண்டார். காமராசர் தனக்குரிய பங்காகப் பல சாகசங்களைச் செய்தார்! அன்றையத் தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராக இருந்த அவரின் முக்கிய அலுவல், அமைச்சர்களை மிரட்டுவது-அடங்காதவர்களை அடக்குவது–அடங்க மறுத்தால் அடுத்த சில நாட்களில் அவர்களைக் கீழே யிறக்கக் குழி பறிப்பது! இந்தக் கர்மவீரன்தான் இப்போது சட்ட சபையின் பேசத் தெரியாத பொம்மை. அடக்குமுறைகளிலேயே வளர்ந்துவிட்ட சென்னை மந்திரிகளில் பலரும் 1952 பொதுத் தேர்தலில் மக்களின் கண்ணீர் வெள்ளத்திலே பிணங்களாக மிதந்தார்கள்; அமிழ்ந்தார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் 1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முக்கியப் பொறுப்பேற்றது. போட்டியிடாமல் காங்கிரசுக் கட்சியினரைத் தோற்கடிக்க நாட்டுப் பிரிவினையின் தேவைக்குக் கை கொடுத்தோருக்கு நேசக்கை நீட்டிப் பணியாற்றியது. இரட்டை மாடுகள் எங்கெங்கோ இடறி விழுந்தன. கால் முறிந்துபோன அவைகளைக் காப்பாற்ற காமராசரால் முடியவில்லை. விரட்டப்பட்ட இராசகோபாலாச்சாரிக்கு முன்னால் மண்டியிட்டுக் கேட்டு, மண்டலமாள வேண்டிக்கொண்டனர். குண்டலமணியாத அந்தக் குல்லூகப்பட்டரும் "காங்கிரசுக் கட்சி ஒரு சாக்கடை. நான் ஒரு துடைப்பத்தைப்போல் அதைச் சுத்தப்படுத்த வருகிறேன்!" என்று வரும்போதே வசைச் சொற்களுடன் வந்து சேர்ந்தார்! அவரை இராமபிரானுக்கித் தன்னை அனுமார் ஆக்கிக்கொண்ட எத்தனையோ இராசாராமன்கள், அடிவருடி நின்றனர். வாய்ச்சவடால் வீரர் சுப்பிரமணியம் தமிழ்நாட்டுக்கு அறிமுகமானதும் 1952-ல் தான்! அதற்கு முன்னாலே அநாமதேயம்! 1952-லிருந்து 1957 வரையிலும் நிலைத்திருந்த சட்டமன்றம் மிகவும் மோசமாக இருந்துவிடாமல் சிறிதளவு உயிர் பெற்றது. முதலமைச்சராக யிருந்த பிரகாசம் ஐக்கிய முன்னணியால் அமைக்கப்பட்ட எதிர்க்கட்சியின் தலைவராக இருந்தார்! ஆந்திரப் பிரிவினைக்குப்பின் 'முன்னணி' உடைந்துவிட்டது! கம்யூனிஸ்ட்கள் எதிர்க்கட்சியினர் ஆகும் தகுதி பெற்றனர். திராவிடப் பார்லிமெண்டரி கட்சியும் உருவாகிச் செயல்பட்டது! அப்போதும் தமிழ்நாட்டின் தேவைகள் தேடிப் பெறப்படவில்லை. தேவிகுளம், பீர்மேடு பறிபோனதற்கு அன்றையச் சட்டமன்றம் பெரும் பொறுப்பாக இருக்கிறது! கம்யூனிஸ்ட் கட்சி தேவிகுளம், பீர்மேட்டினை தமிழகத்துடன் இணைக்கவே விரும்பிற்று. சர்வகட்சிக் கூட்டணிக் கிளர்ச்சியில் இடம் பெற்றது. ஆனால் சட்டமன்றத்தில் ஆதரிப்புத் தீர்மானம் வந்தபோது ஆதரிக்கவில்லை. நடுநிலைமை வகித்தது! ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தும் முறைகளை முன்னேற்றக் கழகம் நாட்டின் எல்லாப் பகுதியிலும் விளக்கிக் கண்டித்த அளவுக்கு சட்டமன்றத்தின் உள்ளேயிருந்தவர்கள் உரத்த குரல் கொடுக்கவில்லை. கண்டனக்கூட்டங்கள் நடத்தியபோது சிவஞானக் கிராமணிகூட "என்னையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். முன்னேற்றக் கழகம் மட்டும் இதனைப் பொறுப்பேற்கக் கூடா"தென்று சேலம் விக்டோரியாத் திடல் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்! ஆனால் சென்னையின் சட்டமன்றம் சதிகளைச் செய்து, திட்டத்தைக் குலைத்தது!

திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றம் சென்றவுடன் கடந்த காலத்தில் அங்கே சாகடிக்கப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் உயிரூட்டி உலாவ விட்டது! அறிஞர் அண்ணா அவர்கள் அறிமுகப்படுத்திப் பேசினார். அவையடக்கமாக அனுபவ உண்மைகளை அதிகம் பெற்றுக் கொள்ள விரும்புவதாகக் கூறினார். உடனே தமிழ்நாட்டிலேயிருக்கும் எல்லாக்கட்சியினரும் "முன்னேற்றக் கழகத்தவருக்கு அனுபவமில்லையாம். இவர்கள் சட்டசபையிலே என்ன செய்யப்போகிறார்கள்?' - இப்படி மிகவும் அவசரமாகக் கேட்டார்கள்! முன்னேற்றக் கழகத்தின் முதல் முழக்கம் முதற் கூட்டத்திலேயே கேட்டது. சொல்லுக்குச் சொல் சுவையேற்றி, சுந்தரச் செய்திகளைக் கழக உறுப்பினர்கள் சொன்னார்கள்! ஆளுங்கட்சியினர்-நாங்களே எதிர்க்கட்சிக்கு இலாயக்கானவர்கள் என்று மற்றவர்கள் சொல்லாவிட்டாலும் தாங்களாகவே சொல்லிக்கொண்டவர்கள் - தற்போது எதிர்க்கட்சி நிலைக்குத் தாழ்ந்து போனாலும் முன்னைய மன்றத்தில் எங்கள் தலைவரே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் எனவே எங்களுக்கே பெருமை அதிகம் எனப் பேசிக் கொண்டவர்கள், இவர்களில் எவருமே அண்ணாவின் அழகுப் புதுமொழிகளுக்கு இணையாகவில்லை! துடுக்கு மொழி பேசியவர்களுக்கெல்லாம் அண்ணாவும் அன்பழகனும் கருணாநிதியும் சண்முகமும் கொடுத்த பதிலுரைகள், கடற்கரையிலே கூடி "இவர்களைக் கொண்டே அவர்களைச் சமாளிப்போம்" என்று பேசிய அமைச்சருக்கும் அவரை நம்பிய அங்கமையார்களுக்கும் அறிவுத் தெளிவைத் தந்தன. 'வாய்ச்சொல்லில் வீரரடி கிளியே' என்ற பாரதியாரின் பாடலுக்கு ஒரு சான்றாக இருக்கும் சுப்பிரமணியம், சட்டமன்றத்தின் விவாத உரைகளையெல்லாம் ஒரு ஓரத்திலே ஒதுக்கிவிட்டு நேரத்தையெல்லாம் முன்னேற்றக் கழகத்தவரின் விளக்கத்திற்குப் பதில் கூறுவதற்கே செலவிட்டதும் இப்போதுதான்! இராசகோபாலாச்சாரியிடம் கற்ற அரசியல் பாடமெல்லாம் இங்கே எடுபட முடியவில்லை! வாய்ப்புகளை வைத்துக்கொண்டு வாயடிக்கிறாரே தவிர, "வாயடைத்துவிட்டார். மாற்றுக்கட்சியினரின் வாதங்களை மறுத்துவிட்டார்" என்று கணக்கிடுவதற்கு எதுவுமேயில்லை! மூன்றாண்டு கால வரவு செலவுத் திட்ட விவாதங்களின் தொகுப்பினைக் காணும் எவரும் இதனை உணர முடியும். முன்னேற்றக் கழகத்தினைப் போல் வேறு எந்த ஒரு எதிர்க்கட்சியும் இதற்கு முன்னாலே தனிப்பட்ட பிரச்னையாக விவாதிக்கப்பட்டதில்லை. விடுதலைக்குரல் எழுப்பியதும் இல்லை!

— அடுத்த இதழில் முடியும் —

திருத்தம்

கடந்த இதழ் ஏழாம் பக்கத்தில் வெளியான கல்லூரி மாணவர்களின் புகைப்படங்களில் மூன்றாவது படத்திலிருப்பவர் தோழர் **வேலாயுதம்.** மாறாக நடராசன் என்று அச்சாகியிருப்பது தவறு.

இன்னுயிராம் தமிழோங் ஈழத்தவர் காட்டும் வழிகள்

கா. பொ. இரத்தினம்,
தலைவர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

"தமிழ் வாழ்க, தமிழ் வளர்க தமிழ் வெல்க..." என்று பலவாறு தமிழ மக்கள் இப்பொழுது முழங்குகிறார்கள். இந்த முழக்கம் தமிழ மக்களுடைய உறைப்பான தமிழுணர்ச்சியைக் காட்டுகிறது என்று கூறல் முடியாது. தமிழ் மக்கள் பலருடைய உள்ளத்திலிருந்து இந்த முழக்கந் தோன்றவில்லை. உணர்ச்சியுள்ள இரண்டொருவர் கூற அவரைப் பின்பற்றிச் செய்யப்படும் ஆரவாரமாகவே இது காணப்படுகிறது. தமிழ் மக்களை பலரிடத்துத் தமிழுணர்ச்சி இன்னும் நன்கு தோன்றவில்லை என்பதற்குப் பல சான்றுகள் உள. சிறிது சிந்திப்பவர்களுக்கும் அவை எளிதிற் புலப்படும்.

அண்மையில் ஒரு கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம நடைபெற்றது. தமிழர்கள் கூடித தமிழிற பேசிச் செயலாற்றினர். அக்கூட்டத்துக்கு வந்த உறுப்பினர் தங்கள் கையொப்பங்களை ஒரு தாளில் இட்டனர். இரண்டொருவரைத் தவிர ஏனையோர் ஆங்கிலத்திலேயே கையொப்பமிட்டனர். தமிழிற் கையொப்பமிடத் தெரியாமல் அவர்கள ஆங்கிலத்தில் இடவில்லை. பழகிய பழக்கத்தால்-தாய் மொழிக்கு முதலிடங் கொடுக்கும் வழக்கம்இன்மையால்-தமிழுணர்ச்சிக் குறைவால் அவ்வாறிட்டனர்.

தமிழாசிரியர்கள், தமிழ்ப்பண்டிதர்கள, தமிழ் எழுத்தாளர்கள், பத்திரிகையாசிரியர்கள, தமிழ்க் கவிஞர்கள்—இவர்களிற் சிலா தமிழிலே கடிதங்களை எழுதி ஆங்கிலத்திலே கையெழுத்திடுகிருர்கள். ஆங்கில எழுத்துக்களையுங் கிரந்த எழுத்துக்களையும தமிழுடன் கலந்து எழுதுகிருர்கள். நிலைத்த கொள்கையும், தமிழ் மரபு பேணும் ஆர்வமும இல்லாமையினுலே இவ்வாறு செய்கிருர்கள்.

தமிழுணர்ச்சி வேண்டும் எனும்பொழுது அவ்வுணர்ச்சி வெறியாகிப பிற மொழி வெறுப்பாக வேண்டுமென்பது கருத்தன்று. உலகிலுள்ள மக்களெலாம் ஒவ்வொன்றும் தத்தம் தாய் மொழியைப் போறறிப் பேணுதல் வேண்டும். ஈன்ற தாயைப பேணுவதுபோலத் தாய் மொழியைப் பேணுதல் ஒருவருடைய தலையான கடன, தன்னுடைய தாயைப் போற்ருமல் அவளைப் புறக்கணித்துப் பிறர் தாயை மட்டும் போற்றுபவனை உலகம் பழிக்கும. தமிழைப் போற்ருமற் பிற மொழிகளுக்கு அடிமைப்படும் தமிழர்களும் பழிப்புக்கிடமானவர்களே.

தமிழுக்குக் குமணன் தலைகொடுத்தான். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறை தமிழ்ப் புலவர் கணையரக் கவரி வீசினுன். கலம்பகத்துக்கு நந்தி உயிர்கொடுத்தான். இப்பெருஞ் செயல்கள் அவர்களுடைய தமிழுணர்ச்சியையே காட்டுகின்றன. இச்செயல்கள் பிற மொழி வெறுப்பால நிகழ்ந்தனவல்ல. எனவே, தமிழர் தமிழுக்குத் தம் வாழ்வின் துறையனைத்திலும் முதன்மை கொடுத்தல் வேண்டும் என்பது மொழி வெறியுமன்று; பிற மொழி வெறுப்புமன்று. இது தாய்க்குச் சேய் செய்யுங் கடமையே யாகும். எனவே இக்கடமை யுணர்ச்சியைத் தமிழ் மக்கள் கைநெகிழ விடல் கூடாது. இவ்வுணர்ச்சி நன்கு நிலைத்தால், தமிழ் மொழிக்குந் தமிழினத்துக்கும் பழிப்புண்டாக்குஞ் செயல்களைத் தமிழர்கள் செய்யமாட்டார்கள்.

சென்ற சில நூற்ருண்டுகளாகத் தமிழர் அரசியற்றுறையில் மட்டுமன்றிப் பிற துறைகளிலும் அடிமைப்பட்டு அடங்கி வாழ்ந்தனர். இதனுல் அவர்களுடைய வாழ்வுத் துறைகளிலே தூசும் மாசும் படிந்துள. இவற்றை நீக்குதற்குத் தமிழுணர்ச்சி வீறுகொண்டு பெருகுதல் வேண்டும். தமிழுணர்ச்சி பெருகினுல், தமிழ் வளம் பெறும்; தமிழினம் தலை நிமிர்ந்து தகுதியோடு வாழும் நிலைமை தோன்றும்.

தமிழ்மொழி வடமொழியினின்றுந் தோன்றியது; வடமொழியின்றி அது தனித்தியங்காது எனுமிக்கொள்கைகள் பிழையானவை; தமிழைத் தாழ்த்தும் நோக்கத்துடன் நிலை நாட்டப்பட்டவை இவற்றை இன்று தமிழ்மக்கள் யாவரும் நன்கறிவர். எனவே தமிழைத் தனி மொழியாக வாழச் செய்தல் தமிழர்தம் கடமையாகும். தக்க தமிழச் சொறகளிருக்கும்பொழுது அவற்றை விடுத்துப் பிறமொழிச் சொல்களை ஆளுதற்கு விரும்பும் மயக்கம் ஒழிதல் வேண்டும். தமிழிலே தக்க சொற்களின்றேல், தமிழ் மரபுக்கேற்பப் பிற மொழிச் சொற்களை ஆக்கிக்கொள்ளல் பொருத்தமானதே. இவ்வாறுதான் தமிழ்மரபு நன்கறிந்த தமிழ்ப் பெரும்புலவர்கள், தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை செய்து வருகிருர்கள்.

தமிழின மரபு சிதையாமலும், உயிர்ப்புக்குன்ருமலும், பண்பு திரியாமலும் வளர்த்து வருவதனுலேதான் ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய தமிழ் நூல்களை இன்றும் தமிழர்கள் இலகுவிற் படித்துச் சுவைக்கிருர்கள். இத்தகைய வாய்ப்பு உலகில் வேறெம்மொழியினருக்கும் இல்லை என்பதை நாம் மறத்தல் கூடாது. பிறமொழிகள் சிலவற்றில் அறுநூறு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோனறிய நூல்களைக்கூட இப்பொழுது இலகுவிற படித்தறிதல் முடியாது. அறுநூறு எழுநூறு ஆண்டுகளுக்குள் அம்மொழிகளில் உண்டான பெரும் வேறுபாடுகளே இதற்குக் காரணம். இவ்வேறுபாடுகளுடன் ஒப்பிடும்பொழுது ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளிலே தமிழில் உண்டான வேறுபாடுகள் மிகமிகக் குறைவாயிருப்பதை நாம் காணலாம். தமிழின் பழம்பெரும் இலக்கியச் செல்வத்தை இழக்காமலிருப்பதற்கும், தமிழை வேருெரு புது மொழியாக்காமலிருப்பதற்கும் விரும்புவோர் தமிழின் தனிப் பண்பைக் காப்பாற்றுதல் வேண்டும் என்பதை உணர்வர். உலகத்திலுள்ள சீர்திருந்திய மொழிகளைப் பேசும் மக்கள் எவரேனும் தமிழரைப்போலத் தம் மொழிகளிற் பிறமொழி எழுத்துக்களைக் கலந்து எழுதுவதில்லை. "S. L. Ilavazhagavar" என்ருே "அ. ஜ. Smith" என்ருே ஆங்கிலேயர்கள எழுதமாட்டார்கள். தமிழர்களோ இன்றும் கிரந்த எழுத்துக்களை மட்டுமின்றி ஆங்கில எழுத்துக்களையுங் கலந்து எழுதும் வழக்கத்தையுடையவர்களாயிருக்கின்றனர். 'C.V. செல்லையா" என்றும் "தி. ஜ. நடராஜா" என்றும் எழுதுகிருர்கள். இந்தப் பழக்கம் இன்னும் ஒழிக்கப்படாமலிருப்பதற்குப் போதிய தமிழுணர்ச்சி இன்மையே காரணமன்ருே!

பிழையின்றி எழுதத் தெரியாதவர்கள் 'பேசுவதுபோல எழுதுகிருேம்" என்று கூறித் தமது அறியாமைக்குத் திரையிடவும் முயல்கிருர்கள். தமிழ் எழுத்தாளர்கள் பலருடைய எழுத்திலும், தமிழ்ப் பத்திரிகைகள் சிலவற்றிலும், இக்காலப் பாடல்கள் பலவற்றிலுங் காணப்படும் எழுத்துச் சொற்பிழைகளையும் இலக்கணப் பிழைகளையும் போன்றவற்றைச் சிறந்துயர்ந்த பிற மொழியாளர்களுடைய பாட்டுக்களிலும், எழுத்திலும், பத்திரிகைகளிலுங் காணல் முடியாது. இவ்வாறு நம் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும கவிஞர்களும் எழுதுவதற்குக் காரணம், தமிழுணர்ச்சிக் குறைவேயன்றி வேறு யாதாயிருக்கலாம? இவர்கள் உணர்ச்சிகொண்டு சிறிதுமுயன்ருல், பிழையின்றி எழுதும் ஆற்றலைப் பெறலாம்.

"சீத்தலைச் சாத்தனுர் எனும் புலவர் பெருமான் தாம் படித்த நூல்களிலே பிழைகளைக் கண்டபொழுதெல்லாம் எழுத்தாணியாலே தமது தலையிலே குத்தினுர். அடிக்கடி குத்தியதால் அவருடைய தலையில் எப்பொழுதும் சீழ் நிறைந்திருந்தது. அதனுலே அவருக்குச் சீத்தலைச் சாத்தனுர் எனும் பெயருண்டாயிற்று. அவர் திருக்குறளைப் படித்த பொழுதுதான் அவருடைய தலையிலேயுள்ள சீழ் மாறிற்று."—இஃது ஒரு கதை. இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. தமிழ்ப் பாடல்களிலே பிழையிருந்தால் அதைப் பொறுக்கமுடியாது வருந்தும் அளவுக்குத் தமிழ் உணர்ச்சி அக்காலத்தில் அறிஞர்களிடம் நிறைந்திருந்தது. இக்காலத்திலோ பிழையின்றித் தமிழை எழுதவும் பாடவும் வேண்டும் எனும் எண்ணங்கூடப் பலரிடம் இல்லாதிருக்கிறது. இந்நிலைமையை மாற்றத் தமிழர் யாவரும் உணர்ச்சியுடன் உழைத்தல் வேண்டும்.

பல நாடுகளிலும் வாழுந் தமிழ் மக்கள் இன்று வேறுபாடு காரணமாகத் தமிழர்களிடையே எவ்விதப் பிணக்குந் தோன்றுதல்கூடாது. சமய வழிபாடுகளையெல்லாம் தமிழிலேயே செய்தல் நன்று.

தமிழருடைய சமய வாழ்வுத்துறைகள் பலவற்றிலே வடமொழி புகுந்து தமிழைத் தலைநிமிர்ந்து நிற்கமுடியாமற் செய்துவிட்டது. தமிழர்களுக்காகத் தமிழ் மன்னர்களாலும் பிறராலும் தமிழ் நாட்டுப் பொருளைக் கொண்டு கட்டுவிக்கப்பட்ட கோயில்களிலே தமிழ் முதலிடம் பெருமலிருக்கிறது. தம் இனத்தவர் சிலரைத் தீண்டாதவராக ஆக்கியது மட்டுமன்றித் தம் தாய் மொழியையுங்கூடத் தீண்டாத மொழியாகத் தமிழர்கள் ஆக்கியுள்ளர் என்பதை இது காட்டுகிறது. இத்தகைய இழிநிலையை உலகத்தில் வேறெம்மொழியினரும் பொறுக்கமாட்டார்கள். இந்நிலையை மாற்ருதிருக்கும் வரையும் தமிழர்கள் மானமுள்ளவராக வாழல் முடியாது. தமிழருடைய உணர்ச்சியிலே பிறழ்ச்சியை உண்டாக்கி, அவர்களை முன்னேறவிடாது தடுப்பதற்கும் மூலகாரணம் இதுதான். தமிழர் தம் வாழ்வுத் துறையனைத்திலும் தமிழுக்கு முதன்மை கொடுக்கும் நாளே தமிழுணர்ச்சி பொங்கும் நாளாகும். இந்நாளை விரைவில் வரச் செய்தல் தமமை உயர்த்துதற்குத் தமிழர் செய்யுந் தொண்டாகும்.

தமிழருடைய சமய வாழ்வுத் துறைகளிலே வடமொழி புகுந்தது போலவே, அவர்களுடைய இசைத் துறையிலே பிற மொழி புகுந்து தமிழருடைய மானத்தை அழிக்கிறது. 'உங்கள் தாய் மொழிப் பாடல்களையே கருத்தறிந்து நீங்கள் சுவைக்கலாம். கருத்து விளங்காத பிறமொழிப் பாடல்களாற் பயனில்லை" என்ற குரல் இன்று உலகிலே தமிழ்நாட்டிலேதான்-தமிழினத்திடையேதான்-கேட்கிறது. தமிழருக்குத்தான் "உங்கள் தாய்மொழி இசையைப் போற்றுங்கள்" என்று வேண்டுகோள் விட வேண்டியிருக்கிறது தம்மைத்தாமே இழிவுபடுத்தற்குக் காரணமான பிறமொழிப் பாடல் மோகத்தை இன்னுந தமிழர் சிலர் விட்டுவிடவில்லை எனின், அவர்களுள்ளத்திலே தமிழுணர்ச்சிக்கு இடமுண்டா?

தம்மக்களுக்கு அழகிய செந்தமிழ்ப் பெயர்களையிடுதல் நாகரிகக் குறைவு என்று கருதிப் பலவகையான பிற மொழிப் பெயர்களையிடும்அளவுக்குத் தமிழர் பலரிடையே தமிழுணர்ச்சி குன்றிவிட்டது "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணேம்" என்று தமிழுணர்ச்சியில் மிகுந்த பாரதியார் பாடினுர். இன்று பல தமிழ்ப் பெற்ருர்களுக்கு இனிய தமிழ்ப் பெயர்கள் வேப்பங்காய்போலக் கசக்கின்றன. அவர்கள் தம் மக்களுக்கு வைக்கும் பெயர்களோ தமிழ் உள்ளங்களுக்கு வெறுப்பை மட்டுமன்றி, வேதனையையுங் கொடுக்கின்றன.

சமயத்துறையிலே வடமொழிக்கு அடிமையாகவும் இசைத் துறையிலே தெலுங்குக்கு அடிமையாகவும் ஆகி

— 4-ம் பக்கம் —

1. மகளே, உனக்குத் திருமணம்!

தங்கத்திற்கு இந்தக் கார்த்திகை வந்தால் வயது இருபத்திமூன்று நிறைந்துவிடும். அவள் சடங்காகிப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. ஆனுல், இன்னும் கழுத்திலே மஞ்சள்கயிறு ஏறவில்லே.

தங்கம் தங்கநிறம் தான்; அவள் குணமும் பத்தரைமாற்றுத் தங்கம் தான். ஆனுல், அழகான பெண் என்பதற்காகவோ, நல்ல குணவதி என்பதற்காகவோ இந்தக்காலத்தில் யாரும் கலியாணம் செய்துகொள்ள முன்வந்துவிடுகிருர்களா என்ன? தங்கம் என்று சொன்னுல் போதுமா? பெயர் இருந்தால் போதுமா? கையிலே எவ்வளவு தங்கம் இருக்கிறது என்று தானே எல்லோரும் பார்க்கிருர்கள்.

கந்தசாமி வாத்தியார், அவர்தான் தங்கத்தைப் பெற்ற புண்ணியவான். அவரிடம் தங்கமும் இல்லே வெள்ளியும் இல்லே. சேமிப்பு என்ற பெயரிலே செப்புக்காசுகள்கூட அவரிடமில்லே. அவரிடம் உள்ள தங்கமெல்லாம் அவர் மகள் தங்கம்தான். ஓர் ஆரம்பப்பள்ளி வாத்தியாரிடம் என்னதான் இருக்க முடியும்?

இந்தக் காலத்தில் எல்லோரும் சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று பேசுகிருர்கள்! ஆனுல், வாழ்வில் அதை யார் கடைப்பிடிக்கிருர்கள்? முன்னேற்றம், முற்போக்கு, பொதுவுடமை ஆகியவற்றைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறவர்கள் எல்லாம் தங்கள் சொந்தப் பிரச்னே வரும்போது திசை மாறிவிடுகிருர்கள்.

வரதட்சிணே, ஸ்ரீதனம், சீர்வரிசை என்ற பெயர்கள் எல்லாம் பெண்ணேப் பெற்றவனின் பணபலத்தைப் பரிசோதிப்பதற்காகச் சமூகத்திலே உண்டாக்கப்பட்டவை. ஆனுல், அவை பரிசோதனே செய்வதோடு நின்றுவிட்டால் பாதகமில்லே. ஏழைப்பெண்களின் இன்பவாழ்வுக்குக் குறுக்குச் சுவர்களாகவும் நிற்கின்றன.

ஆரம்பப்பள்ளியில் வேலே பார்க்கும் ஏழைக் கந்தசாமி வாத்தியாருக்கு உயிரோடு இருக்கின்ற ஒரே ஒரு மகள் தங்கம். அவளுக்கு முன்னும் பின்னும் தோன்றி வளர்ந்து நோயாகிக் கிடந்து கொஞ்ச நஞ்ச நிலபுலன்களுக்குச் சொந்தக்காரராக இருந்த கந்தசாமி வாத்தியாரைக் கந்தலாடைக்காரராக்கி விட்டு மறைந்துபோய்விட்டன, மற்ற குழந்தைச் செல்வங்கள், மிஞ்சியிருந்த ஒரே ஒரு பெண்ணேக் கந்தசாமி வாத்தியாரும் அவருடைய மனேவி மரகதமும் தங்கத்தைப் பாதுகாப்பதுபோல் பாதுகாத்து வந்தார்கள்.

தங்கம் மற்ற குழந்தைகளேப்போல் செத்து மடிந்திருந்தால் கந்தசாமி வாத்தியாருக்கு இந்தக் கவலே ஏற்பட்டிருக்காது என்று சொல்லலாம். ஆனுல், அவளும் போயிருந்தால், அவரும் அவர் மனேவியும் உயிரோடு இருந்துவர முடியுமா?

கண்ணுக்குக் கண்ணுக வளர்த்த அந்தத் தங்கம்தான் எவ்வளவு புத்திசாலிப் பெண்ணுக வளர்ந்துவிட்டாள். கந்தசாமி வாத்தியார் ஒவ்வொரு முறை தனக்குள் நினேத்துப் பார்ப்பார். தனக்கும் தங்கத்துக்கும் ஒரே சமயத்தில் தேர்வு வைத்தால், தங்கம்தான் தன்னேக் காட்டிலும் அதிக மார்க் வாங்குவாள் என்று தோன்றும். அவ்வளவு படித்திருக்கிருள் அவள். பெண்கள் எவ்வளவு படித்து என்ன? வெளியில் விளங்கித் தோன்ற முடியவில்லேயே!

அறிவு, குணம், அழகு எல்லாம் இருந்தும் யாரும் தங்கத்தை நாடி வரவில்லே. நாடி வரவில்லேயென்ருல், கலியாணம் என்று சொல்லிக் கழுத்தில் தாலி கட்டித் தங்கள் இல்லத்து அரசியாக அவளே ஏற்றுக்கொள்ளத்தான் யாரும் நாடி வரவில்லே. வேறு விதத்தில் அவளே நாடி வந்தவர்கள் பலர்.

அம்மாவுக்குச் சமையலுக்காக அவள் திருக்குளத்திற்குத் தண்ணீர் எடுக்கச் சென்றபோது கண்ணுல் சாடை காட்டி அழைத்தவர்கள் இல்லாமல் இல்லே. அவள் தங்கள் பக்கம் திரும்பித் தன் செம்பவழ உதடுகளால் புன்னகை புரிவாளா என்று ஏங்கிக்கிடந்தவர்களும் இருந்தார்கள். கோயிலுக்குச் செல்லும்போது ஒரு நாளாவது அவள் கடைக்கண் அருள் கிடைக்காதா என்று தவங்கிடந்த பக்த சிகாமணிகளும் பலர் இருந்தனர்.

எந்தெந்தப் பாதையிலோ, எப்படியெப்படியோ போகத் திட்டமிட்டு முட்டி மோதித் தடுமாறி விழுந்த கந்தசாமி வாத்தியார் கடைசியில் திருமண முயற்சி செய்வதையே விட்டுவிட்டார். இருந்தாலும் மனத்திலே கவலே உறுத்திக்கொண்டுதான் இருந்தது. இப்படியே பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன.

கொஞ்சிப் பேசும் பஞ்சவர்ணக்கிளி போல் கொள்ளேயழகுடைய தங்கத்தை வீட்டிலே வைத்துக்கொண்டு, பருவமடைந்து பத்து வருடங்கள் ஆகியும் கட்டிக்கொடுக்க முடியாமல் திண்டாடுகின்ற கந்தசாமி வாத்தியாரின் கையாலாகாத்தனத்தைப்பற்றிப் பழித்துப் பேசாத பெண்கள் அந்த ஊரிலேயே கிடையாது. வம்பர் மகாசபை நிகழ்ச்சி நிரலிலே இது ஓர் அங்கமாகிப் போய் விட்டது.

விதிப்படி நடக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டார் கந்தசாமி வாத்தியார். ஆங்காலம் வந்தால் யாவும் தானுக நடக்கும் என்று அவர் தன் மனத்திற்குள் சமாதானம் கூறிக்கொள்வார்.

நெடுநாளேக்குப் பிறகு மறுபடியும் அவர் தங்கத்தின் திருமணத்தைப் பற்றி நினேக்க-அதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று எண்ண - ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டபோது விதிதான் தன்னே இப்படித் தூண்டுகிறதோ என்றுகூட எண்ணினுர்.

கந்தசாமி வாத்தியார் வேலே பார்த்த நெய்யூர் ஆரம்பப் பள்ளியில் முருகேசர் என்று ஒரு புதிய ஆசிரியர் வந்து சேர்ந்திருந்தார். அவர் பள்ளியில் வேலேக்குச் சேர்ந்து ஒரு வருடமாகிவிட்டது. அவரும் கந்தசாமி வாத்தியாரும் மிகவும் அத்தியந்தமாக நெருங்கிப் பழகினுர்கள். ஒருவர் குணம் ஒருவருக்குப் பிடித்துப் போய்விட்டது.

ஒரு நாள் அந்த முருகேசர் கந்தசாமி வாத்தியாரைப் பார்த்துப் பேசும்பொழுது, "கந்தசாமி, எத்தனே நாளேக்கு உன் பெண்ணே இப்படி வைத்துக்கொள்ளப் போகிருய்?' என்று கேடடார்.

"முருகேசரே, என் நிலே தெரியாதவர்போல் பேசுகிறீர்களே?" என்ருர் கந்தசாமி.

"தெரியாமல் பேசவில்லே. இதோ பார். உன் பெண்ணுக்கும் மாப்பிள்ளே கிடைக்கவில்லே. என் பையனுக்கும் பெண் கிடைக்கவில்லே. நான்இவ்வளவு துணிந்து கேட்கிறேனே என்று கோபப்படாதே! உள்ள நிலேமையைத்தான் சொல்கிறேன். எனக்குத் தஞ்சாவூரில் நிலம் இருக்கிறது என்பதும், நெல் விளேந்து வருகிறது என்பதும், உனக்குத் தெரியும். அது ஒரு குடும்பத்திற்கு வருட முழுவதும் சாப்பாட்டுக்குப் போதும். திருமணத்திற்காக ஒன்றும் செலவழிக்க வேண்டாம். நெய்யூர் முருகனுக்கு ஓர் அபிஷேகம் ஆராதனேயைப் பண்ணிவிட்டு அவன் சன்னிதானத்திலேயே திருமணத்தை முடித்துவிடலாம். என்ன சொல்கிருய்?" என்று கேட்டார், முன்னுலேயே யோசித்து முடிவுசெய்துவிட்ட முருகேசர்.

கந்தசாமி வாத்தியார் பதில் சொல்லத் தயங்கினார். ஒருவேளை, முருகப்பிரான் தான், முருகேசர் உருவத்தில் வந்து இந்த முடிச்சைப் போட முனைகிறாரோ என்று மூடநம்பிக்கைகளிலே சில சமயம் படிகின்ற அவர் உள்ளம் கருதியது.

"கந்தசாமி ஏன் தயங்குகிறாய்? எதற்கும் தங்கத்தையும் கேட்டுவிடு. அவள் சம்மதம் என்று சொன்னால் மேற்கொண்டு இதைப் பற்றிப் பேசுவோம். இல்லாவிட்டால் வேண்டாம். இந்த விஷயத்தில் உன் சம்மதம் மட்டும் எனக்குப் போதாது. தங்கமும் சம்மதித்தால்தான் நான் இந்தக் காரியத்தில் ஈடுபடுவேன். நாளைக்கு என் பிள்ளையோடு வாழ வேண்டியவள் அவள் அல்லவா?' என்று நியாயமான ரீதியில் பேசினார் முருகேசர்.

கந்தசாமி வாத்தியார் எதுவும் பதில் பேசவில்லை.

"என்ன, தங்கத்தைக் கேட்டுச் சொல்கிறாயா?" என்று மறுபடியும் கேட்டார் முருகேசர்.

"சரி" என்பதுபோல் தலையை ஆட்டினார் கந்தசாமி வாத்தியார்.

பள்ளிக்கூடம் விட்டு வீட்டுக்குத் திரும்பிய கந்தசாமி வாத்தியார் தயங்கித் தயங்கிக்கொண்டு தான் உள்ளே நுழைந்தார்.

"ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டு வரவேற்றாள் அவருடைய மனைவி மரகதம்,

"ஒன்றுமில்லை...லேசாகத் தலை வலி...தங்கம் எங்கே?...கொஞ்சம் கூப்பிடு"--வார்த்தைகள் விட்டு விட்டு வெளிப்பட்டன.

சிறிது நேரத்தில் தங்கம் அங்கே வந்து அவர் எதிரே அமரிக்கையாக நின்றாள்.

பருவ எழில் பூத்துக் குலுங்கிய அந்தப் பச்சைப் பசுங் கொடிபோன்ற தன் அழகிய பெண்ணைப் பார்த்ததும், கந்தசாமி வாத்தியார் முன்னால் ஒன்று கூட்டிச் சேர்த்து வைத்திருந்த தைரியமெல்லாம் சிதறிப் போய்விட்டது. அவர் பேசுவதற்கு நாவெழவில்லை.

"அப்பா, கூப்பிட்டீர்களா?" வாஞ்சையோடு கேட்டாள் தங்கம்.

வாத்தியார் சிறிது நெஞ்சைத் திடப் படுத்திக்கொண்டார்.

"அம்மா, முருகேச வாத்தியாரை உனக்குத் தெரியுமே?"

"ஓ! தெரியுமே! எத்தனை தடவை நம் வீட்டுக்கு வந்திருக்கிறார்! மிக நல்லவரப்பா! எப்போதும் அவரோடு பேசிக்கொண்டே இருக்கலாம். திருக்குறள் ஒவ்வொன்றுக்கும் அவர் எவ்வளவு அழகாகப் பொருள் சொல்லுகிறார் தெரியுமா?"

"ஆம் அம்மா! அவர் மகன்......" இதற்குமேல் வாத்தியாரின் வாய் அடைத்துப் போய்விட்டது. வார்த்தைகள் சுத்தமாக வெளிவர மறுத்து விட்டன.

"அவர் மகனா? நீங்கள் அவருக்கு மகன் இருப்பதாகச் சொல்லவே யில்லையே! அவர்கூடச் சொல்லவே யில்லையே! அப்பா! அவர் மகனும் அவரைப்போல் பண்டிதராக இருப்பார் இல்லையா?" என்று கள்ளமில்லாமல் கேட்டாள் தங்கம்.

"அம்மா, அவர் மகன் என்றால் அவருக்குப் பிறந்த மகனல்ல. அவருடைய வளர்ப்புப் பிள்ளைதான்!" இப்போது கந்தசாமி வாத்தியாருக்குச் சிறிது தெம்பு வந்துவிட்டது. வார்த்தைகளை வெளியே கக்கிவிட்டார். "தங்கம், முருகேசர் அந்தப் பையனுக்கு உன்னைத் திருமணம் செய்து......" அவர் வார்த்தையை முடிக்கவில்லை.

தங்கத்தின் முகத்தில் நாணத்தின் சிவப்பு படர்ந்தது. வெட்கித் தலை குனிந்துகொண்டாள். அவள் மனமோ எங்கோ உல்லாச உலகிலே பவனி சென்றுகொண்டிருந்தது.

முருகேச வாத்தியார் வளர்த்த பிள்ளையென்றால் அவரைப்போல் அறிவாளியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். இலக்கியம் விரும்பிக் கற்றவன் தன் கணவனாக வந்தால் வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்! பருவமடைந்த புதிதில் கலியாணப் பேச்சு வரும்போதெல்லாம் தன் கணவன் தமிழ் இலக்கியம் படித்தவனாக இருக்க வேண்டும் என்று அவள் கனவு காண்பாள். தன் கனவு நனவாவதற்காகத்தான்-தன் கருத்துக்குகந்த கணவன் கிடைப்பதற்காகத் தான், கடவுள் இத்தனை காலம் கலியாணமாகாமல் தடுத்து வைத்திருக்கிறார் என்று அவள் எண்ணமிட்டாள்.



"இதோ பார், உன் பெண்ணுக்கும் மாப்பிள்ளை கிடைக்கவில்லை; என் பையனுக்கும் பெண் கிடைக்கவில்லை."

கந்தசாமி வாத்தியாரின் குரல் அவள் கனவைக் கலைத்தது.

"அவருடைய சொந்தப் பிள்ளையாக இருந்தால் நான் யோசிக்கமாட்டேன். ஆனால், இவன் யார் பெற்ற பிள்ளையோ?"

"என்னப்பா! கற்றுச் சிறந்த நீங்களே, இப்படிப் பேசினால் என்ன ஆவது? சேற்றில் பிறந்தாலும் செந்தாமரை செந்தாமரை தான்; குப்பைமேட்டில் கிடந்தாலும் குன்றிமணி குன்றிமணிதான் என்று நீங்களே அடிக்கடி சொல்வீர்களே? கள்ளி வயிற்றில் அகில் பிறக்கிறது; காட்டில் சந்தனம் தோன்றுகிறது. அதுபோல நல்லவர்கள் எங்கு பிறந்தாலும் சிறந்தவர்களே!" என்று வெட்கத்தை விட்டுப் பேசிவிட்டாள் தங்கம்.

"அவன் பிறப்பைப் பற்றி நான் கவலைப்படவில்லையம்மா! ஆனால், அவன்...அவன்-..." என்று திக்கித் திணறிய கந்தசாமி அதற்குமேல் பேச முடியாமல் விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டார்.

முருகேச வாத்தியாரின் மகனைப் பற்றி ஏதோ சொல்ல வந்தவர் சொல்லமாட்டாமல் தவிக்கிறார் என்பதைத் தெரிந்துகொண்ட தங்கம். "அப்பா, அழாதீர்கள்! நீங்கள் இதைப் பற்றி ஒன்றும் பேசவேண்டாம்!" என்று சொல்லிச் சமாதானப் படுத்த முயன்றாள்.

ஆனால், அவள் முயற்சி பலிக்கவில்லை. கந்தசாமி வாத்தியார் அழுது கொண்டிருந்தபடியே அன்று இரவு உணவுகூட உட்கொள்ளாமல்அப்படியே தூங்கிப் போய்விட்டார்.

அவர் என்ன சொல்ல எண்ணினார் என்பது புரியாமல் தங்கம் அன்று இரவு முழுவதும் குழம்பிக்கொண்டிருந்தாள்.

2. அரும்பு திருட வந்த அழகன்.

மறுநாள் பொழுது விடிந்ததிலிருந்து கூடத் தங்கத்திற்கு அந்தக் குழப்பமான சிந்தனை மாறாமலேயிருந்தது. வீட்டு வேலைகளில் ஈடுபட்டிருந்தபடியால் ஓரளவு அதைப்பற்றி நினைத்துக் கவலைப்படாமல் இருந்தாள். ஆனால், பெரும்பாலும் வீட்டு வேலைகள் எல்லாம் முடித்து, சாயுங்காலம் துணிமணிகளைத் துவைத்துப் போட்டுவிட்டுத் தோட்டத்துப் பக்கம் இருந்த சன்னல் கதவண்டை போய் உட்கார்ந்தபோது தங்கத்தின் எண்ணங்கள் மீண்டும் தன் தந்தை தன்னிடம் சொல்லத் தயங்கிய திருமணச் செய்தியைச் சுற்றிச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தன.

கந்தசாமி வாத்தியார் அன்று கார்த்திகையானதால், பள்ளிக்கூடம் விட்டதும் நேரே கோயிலுக்குப் போய்த் தீபாராதனை பார்த்துவிட்டு வெகுநேரம் கழித்துத்தான் வருவார். கந்தசாமி வாத்தியார் சில சமயங்களிலே சீர்திருத்த வாதிபோலப் பேசுவார் என்றாலும் அவருக்கு இந்த மாதிரியான பூசை, ஆராதனை, நாள் நட்சத்திரம் ஆகியவற்றிலே உள்ளூற நம்பிக்கையுண்டு. பத்திரிகை வாங்கினால் "இன்று நாளை ஜோசியம்" என்ற பகுதியைத் தான் முதலிலே படித்துப் பார்ப்பார். முக்கியமான தினங்களிலே கோயிலுக்குப் போகத் தவறமாட்டார். இத்தனை நாளும், தன் ஆயுள் பூராவும் ஜோசியம் பார்த்தும் நாள் பார்த்தும், ... வன் அருளை வேண்டி ... யிறைஞ்சியும் யாதும் பயன் ... வில்லை என்பதை அவர் சி... பார்ப்பதே கிடையாது. ... சிந்திப்பதே பாவம் என்பது ... கருத்து.

கந்தசாமி வாத்தியார் வீட்டுக்கு வ... நேரமாகுமாகையால் அவர் மனைவி மரகத அம்மா ஒரு மூலையிலே உட்கார்ந்து பெரிய எழுத்து இராமாயணத்தை மூக்குக் கண்ணாடியின் வாயிலாகக் கண்ணுக்குள்ளே பதித்துக் கொண்டிருந்தாள். தங்கம் மட்டும் சன்னலோரத்திலே இருந்து தோட்டத்துக்குள்ளே தன் பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தாள்.

அந்தச் சன்னலுக்கு நேரே தோட்டத்தின் ஒரு மூலையிலே ஒரு மல்லிகைப் பந்தல் இருந்தது. தோட்டத்தின் பிற பகுதிகளிலே காய்கறிச் செடிகளும், கீரைப் பாத்திகளும் பிற பூஞ்செடிகளும் ஆங்காங்கேயிருந்தன. இந்த மல்லிகைப் பந்தல், கந்தசாமி வாத்தியார் அந்த வீட்டிற்குச் குடிவந்த ஆரம்பத்தில் வைக்கப்பட்டது.

ஆளுயரத்திற்குக் காவணம் கட்டி அதன்மீது செடி படர விடப்பட்டிருந்தது. நல்ல இருண்ட பச்சைநிறமுள்ள இலைகளோடு இடையிடையே கிளிப் பச்சை நிறமான கொழுந்து இலைகளும் தலை நீட்டி அந்த மல்லிகைப் பந்தல் பச்சைப் பசேலென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்தது. அந்தப் பச்சைப் பரப்புக்கு இடையிடையே நீட்டிக்கொண்டிருந்த தூய வெள்ளை நிறமான அரும்புகள், பட்டு மெத்தையில் இடையிடையே தைத்த குஞ்சங்கள்போலத் தோன்றின.

மெல்லத் தவழ்ந்து வந்த தென்றல் காற்று அந்த மல்லிகையின்மணத்தை அள்ளிக்கொண்டு வந்து வீடு முழுவதும் நிரப்பியது. தங்கம் தற்செயலாக அந்த மல்லிகைப் பந்தலை நோக்கினாள்.

அவள் விழிகள் அப்படியே, அந்தத் திசையிலேயே பதிந்துவிட்டன. இருண்டு விளங்கிய அந்தக் கருவிழிகள் குத்து நோக்காக அந்தப் பந்தலையே நோக்கின.

"யார் அது?" என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெடித்துக் கிளம்பின.

யாரோ ஒருவன் அரும்பு மல்லிகைகளை விரும்பிப் பறித்துக்கொண்டிருந்தவன் அந்தக் குரல் கேட்டதும் திடுக்கிட்டுப் போனான். அப்படியே, கையில் இருந்த அரும்புகளைக் கீழே போட்டுவிட்டுத் தோட்டத்துச் சுவரைநோக்கிப் பாய்ந்தான். ஐந்தடி உயரமுள்ள அந்தத் தோட்டத்துச் சுவரில் பரபரவென்று பாய்ந்து ஏறினான். ஆச்சு! இன்னும் கொஞ்சம்தான் பாக்கி! சுவரின் உச்சிக்குப் போய்விட்டால்அடுத்த பக்கம் குதித்துத் தப்பி ஓடிவிடலாம். அதற்குள், பதற்றமோ என்னவோ, தடாலென்று தோட்டத்தின் உட்புறமாகவே விழுந்துவிட்டான் அந்த மனிதன். விழுந்தவன் ஓடுவதற்காக மீண்டும் எழுந்திருந்திருக்க வேண்டும். ஆனால் அவன் எழவேயில்லை.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த தங்கம் சட்டென்று எழுந்து, அவன் விழுந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

(தொடரும்)

மா. முத்துராமலிங்கம்.

அதிகாரிகள் காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்த்தனர்! காமராசர் மீனவர்க்கு வலை வீசினர்!

...ரும் காங்கிரசைப் பார்த்...? நாளும் வாகைபோல் ...து, உதியன்போல் பெருத்து ... காங்கிரசைக் கண்டீரோ? ...த்தனை யெத்தனை பேர் எங்கள் காங்கிரசை நாடி தேடி, ஓடி வருகின்றனர். அடித்த சந்தாப் புத்தகங்களெல்லாம் தீர்ந்துவிட்டன. அடிக்கட்டைகள் புத்தம்புது நோட்டுகளோடு வந்து சேர்ந்து விட்டன. இனிப் புதிதாக 20 இலட்சம் சீட்டுக்கள் அடிக்கவேண்டும்! என்ன செய்வது? ஓய்வில்லை! ஒழிவில்லை! யாரங்கே? மானேசரா? பியூனா? அச்சடிக்கிற இடத்துக்குப் போய், உடனே அடிக்கச் சொல் 20 இலட்சம் இரசீதுகளை!'' என்று ஆணையிடுவதும், அங்கேயிங்கே அலைவதுமாக அளகேசருக்கு மிகுந்த வேலைகள்.

எங்கு போனாலும், “இந்தா நாலணா! இந்தா நாலணா!'' என்று போடுகிறார்களாம், காங்கிரசு உறுப்பினராக. தனது இலட்சிய அளவுக்கு மேல் உறுப்பினர்கள் சேர்வதால், அந்தப் பணத்தை வாங்கி எங்கே வைப்பது என்று தெரியாமல் அவர் திண்டாடுகிறாராம்! “ஐயோ பாவம்! இந்த அளகேசனுக்குத் துணையாக இரண்டு கணக்கர்களைப் போடக் கூடாதா? அண்ணச்சி காமராசர் இதையெல்லாம் கவனிக்கக் கூடாதா?'' என்று வருந்தியவாறே, உலாவப்போனேன்.

x x x

திடீரென்று உறுமிக்கொட்டு வகையருக்கள் ஒரே முழக்கமாய் முழங்கிக் கிழித்தன. ‘தேசிய முரசுகள் அலற, இப்படித் திருவீதி உலாவரும் சீமான் யாரோ?'' என்று வியந்து அருகில் சென்று பார்த்தால், அட, நம்ப காமராசா!

நிற்கும் இடம் திருவொற்றியூர்க் குப்பம் என்றும், நிகழப்போவது மீன் வலை சேமிப்புக்கிடங்குத் திறப்பு விழா என்றும் அறிந்து அப்படியே நின்றுவிட்டேன். காமராசு அத்திறப்பு விழாவை நடத்தி, தன் திருவாயைத் திறக்கப் போவதாகவும் அறிந்தேன்.

‘வெகு நாளாயிற்றே, அண்ணச்சி பேச்சைக் கேட்டு! இன்று பொழுதும் போக வேண்டுமல்லவா!'' என்று நின்றேன். காமராசர் பேசுவதற்கு முன்னர், சில குழந்தைகள் காமராசர் முன் வந்து நின்று ஆங்கிலத்தில் தம் வாழ்த்துக்களை நடிப்பின் மூலம் கூறின.

“என்னண்ணே? இந்தப் பிள்ளைக காமராசருக்கு முன்னே, அவரையே ஆங்கிலத்தில் வரவேற்கின்றன?'' என்றான் உடன்வந்த தம்பி. “நமக் குப்பத்து ஆண் பெண்களை எல்லாம் நாம் காங்கிரசு உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமென்றால், வெறுமனே, ‘நீ வா! நீ கையெழுத்தைப் போடு! நான் பணத்தைப் போடுகிறேன்!' என்று நூறு கையெழுத்துக்களை வாங்கித் தன் பணத்தைப் போடக்கூடாது! **உண்மையாகவே உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும்!** ஏன் இதை நான் சொல்கிறேனென்றால், சிலர் யார் யாரிடமோ கையெழுத்தை மட்டும் வாங்கி விட்டுத் தம் பணத்தைப் போட்டுக் கட்டிவிடுகின்றனர். இதை முதலமைச்சர் அவர்கள் கண்டிக்க வேண்டும்!'' என்று முதன் முதலில் இந்தப் பேச்சை பேசிவிட்டு, பின்னர்தான், வாழ்த்திதழைப் படித்துக் கொடுத்துவிட்டுப் போனார். அப்போது பார்க்க வேண்டுமே, காமராசர் முகத்தை! அவதார முகம் என்றால், அதுதானய்யா!

x x x

அளகேசன் உறுப்பினர் சேர்க்கும் இரகசியம், திருவொற்றியூர்க் குப்பத்தில், இப்படி வெளிப்பட்டது. மத்திய மாநிலத்தில் வேறொரு வழியில் வெளிப்பட்டிருக்கிறது. அங்கே காங்கிரசுக்காரர்கள் அலையாய் அலைந்தாலும் கையெழுத்துப் போடுவதற்குக்கூட ஆள் அகப்படவில்லை

கெதற்கு அந்த ஆராய்ச்சி'' என்று அவனை அடக்கினேன்.

x x x

காமராசரை வரவேற்றுப் பல நிறுவனத்தார் வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர். ஆனால் ஒவ்வொருவரும், காங்கிரசார், மீனவர் சமுதாயத்திற்குச் செய்யத் தவறியவற்றை, காமராசரை வைத்துக்கொண்டே சுட்டினார்கள்; குத்தினார்கள். இதைவிட வேடிக்கை, காமராசர் அவ்வளவையும் “இம்'' கொட்டிக் கேட்டுக்கொண்டிருந்தது தான்.

x x x

ஒருவர் திடீரென வாழ்த்திதழ் ஒன்றுடன் மேடையேறி, “இந்தக் போலும். ‘நாம் போனால்தானே இவர்கள் சேரமாட்டேன் என்கிறார்கள். அதிகாரிகளை அனுப்புவோம்! அப்போதாகிலும் அஞ்சி நடுங்கிச் சாகத்தானே வேண்டும்! மறுக்காமல் சேரத்தானே வேண்டும்!''என்றெண்ணினர் போலும். காங்கிரசு அடிப்படை உறுப்பினர்களைச் சேர்க்க அதிகாரிகளை ஏவினர்; அனுப்பினர். அவர்களும் அப்படியே சென்று “கண்ணில் பட்டவர்களை எல்லாம் நீ காங்கிரசு உறுப்பினன்! போடு கையெழுத்தை!'' என்று வாங்கி வந்து, உறுப்பினர் விண்ணப்பத் தாள்களை, மத்தியமாநிலத்தலைமைக் காங்கிரசுக் குழுவுக்கு அனுப்பிவிட்டனர் “இத்துணை உறுப்பினர்களா? இவ்வளவு செல்வாக்கா இந்தப் பகுதியில் காங்கிரசுக்கு?'' என்று வியந்து, மகிழ்ந்து, அந்த விண்ணப்பத் தாள்களைப் பரிசீலிக்கத் தொடங்கிய போதுதான் தேள் கொட்டியதாம். கண்ணில் பட்ட இராமன், சோமன், காமனை எல்லாம் உறுப்பினராக்கிய அவ்வதிகாரிகள், உறுப்பினர்களைச் சேர்த்தோர் கை எழுத்துப் போடவேண்டிய இடத்தில் தம் கையெழுத்தைப் போட்டுவிட்டனராம்! திருடத் தெரியாதவர்கள்! தாசில்தார்களாகவும், பத்வாரிகளாகவும் வேலை பார்க்கும் அந்த அதிகாரிகள், காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்க வந்ததே தவறு. அதைவிட, முட்டாள்தனமானது, விண்ணப்பத்தாளில் கையெழுத்திட்டது. இவ்வளவு தவறான செயலை அவர்கள் எப்படிச் செய்தனர் என்று ஆராய்ந்து பார்த்தபின்தான் உண்மை வெளியானது. அத்தனைக்கும் அடிப்படை அந்தமாநிலத்தின் காங்கிரசு அமைச்சர் ஒருவராம். அவர்தான் இந்த அதிகாரிகளையும், இவர்களது அதிகாரங்களையும் பயன்படுத்திக்கொண்டாராம்! இப்போது பிரதேசக் காங்கிரசுக் கமிட்டி, அமைச்சர்மேல் நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லி, திங்கள் மூன்றாகிவிட்டது. எடுத்த நடவடிக்கை ஏதோ? இப்போது அந்த அமைச்சரின் நிலை யாதோ?

x x x

திருவொற்றியூர், முற்றுந் துறந்த பட்டினத்தார் அடங்கிய இடமாம்! அதனால் மூவாசைகளையும் துறந்த பட்டியார், வந்ததும் பொருத்தம் தான்; வலை வீசியதும் பொருத்தம் தான்! மீன்களைப் பிடிக்க வலை வீசுகிறார்கள் மீனவர்கள்; அவர்களைப் பிடிக்க வலை வீசினார் காமராசர்! ஆனால் அவர்கள் வலையில் சிக்குவதற்குப் பதிலாக, வலையையே கிழித்துவிட்டார்கள், மேடையில் வெளியிட்ட குமுறல்களால்.

அதையெல்லாம் சரிக்கட்டவும் சமாளிக்கவும், காமராசர் “சரணாகதி''யடைந்தார்! “நான் என்ன மந்திரவாதியா? ஏதோ, முடிந்த அளவு செய்றேன். இன்னும் நன்னா செய்றவா யாரேனும் வந்தா விட்டுடறேன். அவா குத்தம் சொல்றாளே ஒழிய, நல்லது ஏதும் செய்றாளா? இல்லையே! இங்கே வர்றாஇல்லையே!''–இப்படி ஓடியது, அந்த “சரணாகதி''ப் பேச்சு! பாவம்; ஒரு முதலமைச்சர் இந்த ஒப்பாரி வைக்க வேண்டியதில்லை!

x x x

திடீரென்று ஒரு கேள்வியைப் போட்டார். “ஊழல் ஊழல்ன்னு கத்துறீங்க! ஊழல்ன்னா என்ன? எங்கேயிருக்கு? காட்டமுடியுமா? இந்த ஊழல்ங்ற வார்த்தை அவர்களிடத்திலே அகப்பட்டுப் படாத பாடுபடுது!'' என்று ஆரவாரமாகப் பேசினார். நான்கூட, ‘சிந்தாமணி தேசமுக்குக்கு ஏன் இவ்வளவு தொல்லை? காமராசர்தான் ஊழல் என்ற ஒன்றே கிடையாது என்று சொல்லிவிட்டாரே! பின் ஏன் அவர் பேச வேண்டும்!'' என்றெண்ணினேன்.

காமராசர் இப்படித் திருவொற்றியூரில் பேசிய மறு நாளே, அதாவது 30-4-60 அன்று சட்ட சபையில் நம் அன்பழகன் ஊழலின் பட்டியலைப் படித்துக் காட்டினார். சென்னை நகராட்சியை நடத்தி வந்த காங்கிரசார், 51 முதல் 59 வரை உள்ள எட்டாண்டுகளில் மட்டும் 4800 ஊழல்களைப் புரிந்திருக்கின்றனர் அவர் இதை இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. தணிக்கையாளர் குறிப்பைச் சான்றாகக் காட்டிப் பேசினார்.

அந்த நேரத்தில் அண்ணச்சிகளின் வாய் அடைத்திருந்தது ஏன்? ஏன்?

இனியும் காமராசர் எங்கேனும் மேடையேறி, ‘ஊழல் என்றால் என்ன? அது எப்படி இருக்கும்?'' என்று கேட்டால், இப்படி இருக்கும் என்று பொதுமக்கள் சொல்லலாம்: “ஊழல் என்றால் காங்கிரசு! அது உம்மை உரித்து வைத்தாற்போல இருக்கும்!'' ★

— செல்லையா —

சித்திர அரிச்சுவடி

தமிழ் எழுத்துக்களை அழகிய படங்களுடன் படிப்பிக்க உதவுகிறது இந்த நூல். கண்ணைக் கவரும் சித்திரங்களுடன் அகர வரிசையைப் போதிக்கும் இந்நூலை எல்லாக் குழந்தைகளும் விரும்பிப் படிக்கும். சரிபாதி பக்கங்கள் பல வண்ணங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

சிறுவர் சித்திர அகராதி

முன்னூல் அகர வரிசையில் எழுத்துக்களைமட்டும் கற்றுத் தருகிறது. இது ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு வாக்கியத்தைக் கற்றுக்கொள்ள உதவுகிறது இதிலும் குழந்தைகள் நெஞ்சை மகிழ்விக்கும் அழகிய ஓவியங்கள் உள்ளன.

இதுபோன்ற நூல்களில் கையாளப்படும் சொற்றொடர்கள் மரியாதையையும் தாய்மொழி அறிவையும் வளர்ப்பனவாக இருத்தல் நலம். ''தையல்காரன்'' என்றிருப்பதைத் ''தையல்காரர்'' என்று சொல்லலாம். ''ஆபீசு'' என்றிருப்பதை, ''அலுவலக'' மாக்கியிருக்கலாம். ''கம்மி'' என்பதை, ''குறைவு'' என்று சொல்லலாம்.

மொத்தத்தில், இரண்டு நூல்களும் குழந்தைகளுக்குப் பரிசு அளிப்பதற்கு ஏற்றவை.

கிடைக்குமிடம் :

இந்தியா புக் அவுசு,
(புருசோத்தம் கட்டிடம்)
193, மவுண்ட்ரோடு,
சென்னை-2.

ஒவ்வொன்றும் விலை 75 காசு

★

தேன்

(சிறுவர் கிழமை இதழ்)

ஆசிரியர் : **வி. சி. தமிழ்தாசன்**

கழகத் தோழர்கள் நடத்தும் பல வகை ஏடுகளிலே இது ஒரு வகை. சுவையான பல அம்சங்கள் நிறைந்து, படிக்கப் படிக்க இன்பத்தைத் தருகின்றது. சிறுவர்க்கென்றே நடக்கும் இவ்வேட்டில்குழந்தைஉள்ளத்தைத் தொடும் கதைகள் நிறைய உள்ளன. கழகத் தோழர்கள் வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமில்லை; எல்லாக் குழந்தைகளுக்கும் இது ஒரு நல் விருந்து!

அலுவலகம் :

13/2, பிரான்சிசு டியூரின் தெரு,
சென்னை-1.

தனி யிதழ் 10 காசு.

சிலப்பதிகார வகுப்பு

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்
(எஸ்பிளனேடு)

செந்தமிழ்க் காவலர் டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்களால் ஒவ்வொரு திங்களும் இரண்டாவது நான்காவது செவ்வாய்க் கிழமை, மாலை 6-15 மணிக்கு வகுப்பு நடத்தப்படும்.

இலக்கிய விருந்து அருந்த விரும்புவோர் வருக, வருக.

திரும்பிப்பார் தென்னகத்தை!

ஆசிரியர் : **தாதைநங்கம்.**

''வெள்ளையனுக்குப்பின், மற்றொரு கொள்ளையனும் சுரண்டுவதா?''- இந்த வினவைத் தொடுத்திருக்கிறார் ஆசிரியர். தொடர்ந்து எழுதினால், ஆசிரியர் வெற்றி காண்பது உறுதி.

வெளியீடு :

செந்தமிழ்ச் சோலை,
சேலம்-1

விலை 37 காசுகள்.

★

தமிழன் உலா!

கடவுளர்களையும் காவலர்களையுமே சுற்றிச் சுற்றி வரும் சிற்றிலக்கிய வகைகளில், உலாவும் ஒன்று.

காணாத ஒன்றுக்குப் புலவர்களின் மூளைகள் சொல்வளத்தைப் பாய்ச்சியதால் எழுந்தன, பழைய உலாக்களும் தூதுக்களும். புதுமை ஆர்வம் மிக்க அரங்கசாமி அவர்கள் அம்முறைக்கு மாறாக, இன உணர்வுக்காக இந்த உலாவை இயற்றியிருக்கிறார். பாராட்டுக்குரியன, இதன் பல சுவைகளும். சொல்வளம், பொருள் வளம் மிக்க இந்நூலைச் சுவைத்தால் பயன் உண்டு.

வெளியிட்டோர் :

திருக்குறள் பதிப்பகம்,
இராசிபுரம்.

விலை ரு 1.

★

புகழ்பெற்ற ஏழைகள்

மொழிபெயர்த்தவர் :
குண்டூசி கோபால்.

தன்னைவிட இரண்டு மடங்கு வயதான விதவையை மணந்துகொண்ட சாம்யூல்சான்சன்; உலகப் பேரிலக்கியங்களைக் கற்க விரும்பி, பிறர் உதவி இன்றித் தானாகவே பல மொழிகளைக் கற்ற பெஞ்சமின்பிராங்களின்; தந்தை படித்த நூலைத் தனக்குத் தருமாறு கேட்டு முயன்று பெற்ற பாலகங்காதர திலகர் ஆகியோர் உள்ளிட்ட பதினேழு பேர்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து புகழ்வானுக்கு உயர்ந்து சென்ற கதைகள் இதில் எழுதப்பட்டிருக்கின்றன. அனைத்தும் படிக்கச் சுவையாயிருப்பதோடு, வழி காட்டுவனவாயுமுள. தமிழ் மக்கள் அதிகம் அறிந்து கொள்ளாத வில்ரோசர்சுவாழ்க்கைக் குறிப்புக்களும் இதில் உள.

மொழிபெயர்ப்பு எளிய நடையில் செல்கிறது, சுவை குன்றாமல்.

விற்பனை உரிமை :

இந்தியா புக் அவுசு,
சென்னை-2.

விலை 75 காசுகள்

★

தோழர் சமுதாயக் கழக வெள்ளி விழா மலர்

சென்னையிலுள்ள தோழர் சமுதாயக் கழகம் ஆற்றிய பணிகளையும் அதன் உறுப்பினர்கள் சுற்றிய ஊர்களையும் காட்டும் இம்மலரில், மாக்மில்லன், டாக்டர் அ. சிதம்பரநாதன், அமைச்சர் சுப்பராயன் முதலிய பலர் கட்டுரைகள் உள்ளன.

வெளியிட்டோர் :

தோழர் சமுதாயக் கழகம்,
சென்னை.

விலை இல்லை.

— 5 ம் பக்கத் தொடர்ச்சி —

யதால் தமிழர் தம் பகுத்தறிவைக் கெடுத்துச் சிந்திக்கும் ஆற்றலை இழந்தனர். இதனால், சாதி வேற்றுமையைப் போற்றித் தீண்டாமையைப் பாராட்டும் கொடுமை அவர்களிடையே தோன்றிற்று. 'தமிழ்' என்றால் 'இனிமை' என்பது பொருள். 'தமிழர்' என்றால் இனியவர்' எனலாம். சாதிவேற்றுமையைப் பாராட்டித் தீண்டாமையைப் போற்றுபவர்கள் எவரையேனும் இனியவர் என்று கூறலாமா? எனவே தீண்டாமைப் பேய் பிடித்தலைபவர்கள் இனியவரல்லர்; தமிழரல்லர். இவர்கள் தொகை இன்று குறைந்து வருகிறது. எனினும், யாழ்ப்பாணத்திலே இத்தகையோர் சிலர் இன்னுங் காட்சியளிப்பது வெட்கத்துக்கிடமானது.

நம்மக்களிடையே காணப்படும் தமிழுணர்ச்சிக் குறைவுக்கும், தமிழ்ப் பண்பாடு, நாகரிகம் என்பனவற்றுக்கு மாறான செயல்களுக்கும் அடிப்படைக் காரணம் தமிழ்மொழி வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு முதலியவற்றை முறையாகப் பலர் அறியாதிருத்தலே யெனலாம். பொய்க் கதைகளையும், கட்டுக் கதைகளையும், மயச்கம் மிக்க புராணக் கதைகளையும் சிறிதும் ஆராயாமல் நம்பி மயங்கிக் கிடப்பவர்களும் பலர் உளர். இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் மேடைகளிலே ஏறி ''நமது தமிழ் நாட்டிலே தோன்றிய நளமகாராசன் தருமர்...''என்று பேசுகிறவர்களும் ''நம் தமிழ்ப் பெண்மணிகளிலே சீதையும் பாஞ்சாலியும் அனுசூயையுஞ் சிறந்தவர்கள்...''என்று கூறுபவர்களும் பலர். வள்ளுவர், ஔவையார், அகத்தியர் முதலியவர்களைப் பற்றிய கட்டுக் கதைகளையெல்லாம் உண்மைச் செய்திகள் என்று உளறுபவர்களும் உளர். தமிழ்த் தலைவர்கள், தமிழறிஞர்கள் என்பவர்களிடமே இத்தகைய அறியாமை காணப்படுகிறதெனின் பொது மக்களின் நிலைமைபற்றிக் கூறவும் வேண்டுமா? இந்த அறியாமை நீங்கினாலன்றித் தமிழர் தமிழராக வாழுதல் முடியாது.

தமிழருடைய தாய் மொழி தமிழ். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் யாவருந் தமிழர். தமிழன் என்ற பெயரைக் கொடுத்துத் தமிழினம் என்ற ஓர் இனத்தை ஆக்கியிருப்பது தமிழ்; தமிழினத்தை இணைத்து வைத்திருப்பதுந் தமிழ்! தமிழர் இந்த உண்மையை மறவாதிருந்தாற்றான் தமிழராக வாழலாம்; தமிழினமாக இணைந்திருக்கலாம்.

உலகத்தின் பல நாடுகளிலும் வாழுந் தமிழ் மக்களிடையே தமிழுணர்ச்சியை வளர்க்கவுந் தமிழினத்தை ஒன்றுபடுத்தவும் இந்நாடுகள் யாவற்றிலுமுள்ள தமிழர்கள் முயலுதல் வேண்டும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள தமிழறிஞர்களிற் சிலரேனும் பிற நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழர்களுடன் தொடர்பு கொள்ளுதல் இன்றியமையாதது. இத்தொடர்பை உண்டாக்கி, உலகத் தமிழர் யாவரையும் ஓரமைப்பிலே பிணைப்பதற்கு ஓர் **அகில உலகத் தமிழ்க்கலை மன்றம்** நிறுவப்படல் வேண்டுமென்பதை, யான்முன்னரும் பல முறை எடுத்துரைத்துளேன். இத்தகையதொரு நிலையத்தை விரைவில் நிறுவுதற்குத் தமிழ்மக்கள் முயலுதல் வேண்டும்.

தமிழுணர்ச்சி நிலைத்துத் தமிழினம் ஒன்றுபடுதற்குத் தமிழர் யாவரும் எவ்வித வேறுபாடுமின்றித் திருக்குறளைத் **தமிழ்மறையாகப்** போற்றி அதனைத் தந்த திருவள்ளுவருக்கு ஆண்டில் ஒரு நாளேனும் விழா எடுத்தல் வேண்டும். **தமிழ் மறைக் கழகத்தின்** முயற்சியால் வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. எல்லாத் தமிழரும் வள்ளுவர் விழாவைத் தமிழினத்தின் தனிப்பெரு நாளாக ஆண்டுதோறும் தத்தம் வீடுகளிலே கொண்டாடுதல், தம்முடைய கடன் என்றுணர்தல் வேண்டும்.

''கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூதத குடி'' என்று பழமை பாராட்டுந் தமிழினம்-மிகப் பழைய மொழிகளில் ஒன்றாகிய தமிழைப்பேசும் தமிழினம்-தனக்கென ஒரு தொடர் ஆண்டை வழங்காதிருத்தல் மானக்கேடான செயலாகும் பிறநாடுகளோடு தொடர்புடைய தொடராண்டுகளை வழங்குவது மதிப்புக்குரியதாகாது. இதனை நன்குணர்ந்த தமிழ்ப் பேரறிஞர்கள் சிலர், வள்ளுவர் தொடராண்டினைத் தமிழ்மக்கள் வழங்கல் வேண்டுமென அறிவுரை நல்கியுளர். வள்ளுவர் தொடர் ஆண்டை இப்பொழுது சிலர் வழங்குகிறார்கள். தமிழர் யாவரும் இதனை வழங்குதல் வேண்டும்.

தமிழினம் தன் பழமைக்கும், உயர்ந்த பண்பாட்டுக்கும், பகுத்தறிவுக்கும் ஏற்ற முறையில், தன் வாழ்வினை வளம்படுத்தற்கும், தமிழர் தமிழுணர்ச்சியுடன் வாழுதற்குஞ் செய்யவேண்டியன பற்றி என் உள்ளத்தெழுந்து நிலைத்து நிற்குங் கருத்துக்களிற் சிலவற்றை ஈண்டு எடுத்துக் கூறினேன். இவற்றை ஆராய்ந்து ஆவன செய்தல் உலகெங்கும் வாழுந் தமிழ்மக்களுடைய கடனாகும். **'இன்றில்லாவிடின் நாளையாகுதல்' இவற்றைத் தமிழினம் ஏற்றுப் போற்றிச் செயற்படுத்தும் எனும் உறுதியான நம்பிக்கை எனக்குண்டு.**

''கலங்காது கண்ட
வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்''

—தமிழ்மறை 668

''துன்பமுறவரினுஞ்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

—தமிழ்மறை 669

[பி]றப்பு

தோழர் ப. புகழேந்தி அ[வர்]களின் தங்கையும், சிவக[...] கணேசன் அவர்களின் ம[னை]வியாருமான **செல்லம்மா[ள்]** 2-5-60-ல் ஒரு பெண் ம[க]வுக்குத் தாயானார்கள். தாயும் சேயும் நலம்.

—(ஆ-ர்.)

மறைவு

திருவில்லிபுத்தூர் ஆதாரப் பள்ளித் தணிக்கையாளர் அலுவலகத்தில் பணியாற்றியவரும், இயக்க அனுதாபியுமான வேப்பங்குளம் **கணபந் செல்லையா** 16-4-60-ல் இயற்கை எய்தினார் என அறிவிக்க வருந்துகிறோம்.

—(ஆ-ர்.)

எழுதாய் கண்ணே!

அன்பே !என் ஆருயிரே ! அமுத ஊற்றே !
அருந்தமிழர் குலக்கொழுந்தே ! அருமைத் தேவி !
முன்போர்நாள் பதினெட்டு யாண்டு முன்னே
முகங்கவிழ்த்து மணப்பந்தல் அமர்ந்தி ருந்தாய்
பொன்போல ஒளிவீசும் கமுகைப் போன்ற
புனிதமிகு நின்கழுத்தில் காஞ்சி தந்த
தன்னேரில் அண்ணலார் தலைமை தாங்கத்
தண்மலர்மா மாலையிட்டுன் தலைவன் ஆனேன்.

மணவாழ்த்துக் கூறவந்த அறிஞ ரேறும்
வண்கவிதை மேகமெனும் கவிஞ ரேறும்
பிணவாழ்க்கை நடத்துகின்ற திராவி டர்க்குப்
பெருவாழ்வு தேடுகின்ற கலைஞ ரேறும்
பணவாழ்க்கை மணவாழ்க்கை பதவி வாழ்க்கைப்
பண்பனைத்தும் இவர்களெல்லாம் பகர்ந்தார் அன்றோ ?
இணைவாழ்க்கை எய்துகின்ற நமக்கு நாட்டின்
இயல்பெல்லாம் தெளிவுபட இயம்பி னரே !

வற்றாத வளங்கொழிக்கும் திராவி டத்தில்
மதிவளமும் சுயவுணர்வும் வறண்ட தாலே
பற்றாத குணங்கொண்டோம்; சாதி கொண்டோம்;
பழிகொண்டோம்; நமக்குள்ளே பகைமை கொண்டோம் !
செற்றாரை வென்றொழித்துத் திண்டோள் வீரம்
திசையெல்லாம் புகழ்மணக்கச் செங்கோல் ஓச்சி
அற்றாரை ஆதரித்த நம்மூ வேந்தர்
அடிசாய்ந்தார் ! அரசிழந்தார் ! அபலை யானோம் !

இறப்பதற்கே பிறந்துள்ளோம் எனும்வே தாந்தம்
எவனோஒர் சோம்பேறி சொன்னான் அந்நாள் !
சிறப்பதற்கே முயலாதீர் என்றான் ! அந்தத்
தீயவன்சொல் காடுபட்ட தீப்போற் பற்றிப்
பொறுப்பதற்கே முடியாத புன்மை வாழ்வைப்
புண்ணியம்சேர் நல்வாழ்வாய்ப் புகன்றில் வாழ்வை
வெறுப்பதற்கே பழகலுற்றார் சில்லோர் நாட்டில் !
'விதி'என்றார் ! கடவுளரின் வேலை என்றார் !

நாட்டுநலம் என்பதெலாம் மறைந்தே போச்சு !
நமதுநலம் என்பதொன்றே பலர்க்கும் ஆச்சு !
வீட்டுநலம் கருதுவதே கடமை என்றார் !
வேறுநலம் பேணுவது மடமை என்றார் !
வீட்டுவரை உள்நாடு; வீதி கூட
வெளிநாடு போற்கருதி வினைசெய் வேளை
வேட்டையிடும் காடாகத் திராவி டத்தை
வெளிநாட்டார் கைக்கொண்டார்; வெற்றி கண்டார் !

அயலார்தம் ஆதிக்கம் முளைக்க லாச்சு
அவர்மொழியே அரசாளும் மொழியு மாச்சு
இயலார்ந்த தீந்தமிழை இகழ லாச்சு !
இனவுணர்ச்சி சிறிதுமின்றி இறந்தே போச்சு !
வயலார்ந்த திருநாட்டின் செல்வ வாழ்வை
வந்தவர்கள் மனம்போலத் துய்க்க லாச்சு !
மயலார்ந்த தேனீப்போல் மதிம யங்கி
வந்தவர்கள் கைப்பட்டோம்; மானங் கெட்டோம் !

இக்காலத் திராவிடத்தின் இளைஞர் பல்லோர்
எங்கெங்கோ ஓடுகின்றார் அயல்நாட் டுக்கே.
முக்கால அறிவறியும் கல்விக் கல்ல !
முனைமுகத்திற் பகைமுடித்து மீள வல்ல !
அக்காலம் போற்பொருளை அள்ள வல்ல !
ஐயகோ வயிற்றுக்கே அலைய லானார் !
"எக்காலம் விடியுமோ ? நமது வாழ்வில்
இருள்நீங்கி இன்புறுநாள் என்றோ ?" என்றார் !

காதலொடு கள்வெறியைக் கலந்து பாய்ச்சும்
கண்படைத்த மடமானே ! கற்பின் செல்வி !
மாதரசே ! நீயுந்தான் மன்றல் ஞான்று
மனங்கசியத் தலைவர்கள் சொற்கேட் டாயன்றோ !
"பூதலத்தில் மிகச்சிறந்த நமது நாட்டில்
புசிப்பதற்கே வகையில்லை என்றால் இந்தப்
பாதகத்தைப் புரிகின்ற அயலார் ஆட்சி
பாதாளம் வரைபுதைக்கப் படவேண் டாமோ ?"

என்றெல்லாம் முழங்கியவர் அந்த நாளில்
எந்தலைவர் மட்டுமல்ல; இங்கி லாந்து
மன்றெல்லாம் அதிர்ச்சியுறக் கூட்டம் கூட்டி
வஞ்சினங்கள் கூறினர்காண் கதர்ச்சொக் காய்கள் !
அன்றெல்லாம் அவர்பேச்சை மதித்தே மக்கள்
ஆங்கிலப் பேராட்சியினை அகற்றி விட்டார்.
இன்றெல்லாம் என்னநிலை ? சொல்வாய் பெண்ணே !
இணைபிரிந்த மான்போலப் பிரிந்தோம் நாமே.

முத்தன்ன வெண்ணகையாய் ! முந்தை நாளில்
மூதறிஞர் மணவாழ்த்து முழக்குங் காலை
பத்தென்ன இருபதென்ன செல்வம் தேடப்
பதினாயி ரங்கோடி தேட லாமே
வித்தன்ன கைத்தொழிலும் வீர நெஞ்சும்
விரிகல்வி திரள்தோளும் ஒருங்கு சேர
இத்தன்மை பெற்றிருக்கும் எனக்கேன் அச்சம்
ஏதோஒர் கதையென்றே எண்ணங் கொண்டேன்.

மணமுடித்த ஓராண்டுக் குள்ளே சொந்த
வளநாட்டில் வாழ்வதற்கு வகையில் லாமல்
உணவளிக்க முடியாமல் உள்ளம் நொந்தேன்
ஒருதிங்கட் கர்ப்பிணியாம் உன்னை விட்டுத்
தணலிலிட்ட புழுப்போலத் துடிது டித்துத்
தனிவழியே இலங்கைக்கு வந்தேன் பாவி.
குணமிகுத்த பெண்பாவாய் ! தலைவர் சொன்ன
குறிப்புரைகள் கொத்துதடி ! என்ன செய்வேன் ?

என்காதல் உயிர்த்துணையே ! உன்வ யிற்றில்
எழுந்ததிரு மணச்சின்னம் என்னாயிற்று ?
பொன்காதல் மீறியதால் உன்னை விட்டுப்
போயினரென் றெனைஎண்ணிப் புலந்தி டாதே
உன்காதல் ஒருபுறத்தில் உந்தி ஈர்க்க
உடன்பிறந்த வறுமைஒரு புறத்தில் ஈர்க்க
இன்சாதல் எய்தாமல் மத்துப் போல
இழுபட்டுத் தினம்செத்துப் பிழைக்கின் றேன்நான் !

இருபதாம் நூற்றாண்டு நாற்பத் தேழில்
இந்தியர்க்குச் சுதந்தர நாடான தென்றார்.
ஒருபதாம் மூன்றாண்டு முன்னே அந்த
உவகைதரும் செய்தியினைச் சொன்னார் இங்கே.
வருவதாம் நல்வாழ்வு வந்த தென்றே
வாயாரத் திருப்பள்ளுப் பாடி ஆடி
திருவிழா எடுப்பித்தோம் இங்கே என்போல்
திராவிடத்தார் தீந்தமிழர் பலலட்சம் பேர் !

இலங்கையிலும் அத்தகைய சுதந்தரந் தான்
எப்படியோ வந்ததந்த நாளில் அன்பே !
கலங்குகிறோம் சுதந்தரத்தின் பயனைக் கண்டு;
காலமெல்லாம் உழைத்துவரும் தமிழர் தம்மை
விலங்கனைய சிங்களவர் அயலார் என்றே
வெம்பகைமை காட்டுகின்றார் ! கொலைசெய் கின்றார் !
நலங்குலையும் தீமையெலாம் புரியா நின்றார் !
நாதியில்லை 'ஏன் ?'என்று கேட்ப தற்கே !

வெம்மடங்கல் எனச்சீறும் சவகர் லாலார்
மிகச்சிறந்த அறிவாளர் என்று வாயால்
மும்மடங்கு புகழ்பேசி இலங்கை முற்றும்
முழக்கமிடும் சிலருள்ளார் ! அவர்கூற் றுப்போல்
எம்மடங்கு மதிவாணர் எனநான் காண
இயன்றமட்டும் விரிவாக எடுத்தி யம்பி
இம்முடங்கல் கண்டவுடன், இனிதே நீயும்
இருக்கின்ற விவரமெலாம் எழுதாய் கண்ணே !

—அருப்புக்கோட்டை
எம். எஸ். இராமசாமி.

15-வது இதழ் விற்பனையாகிறது!
தம்பி, தங்கையரின் வார ஏடு!

தேன்

ஆசிரியர்: வி. சி. தமிழ்தாசன்
விலை 10 காசு. ஆண்டுக் கட்டணம் ரு. 5.
இதழ் ஒன்றுக்கு 50 காசு முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.
"தேன்" சென்னை-1.

தென்றல்

கருநாடகத்தின் வளங்கள்

வளமில்லையா கருநாடகத்தில்? இருக்கிறது வளம். ஆனால் வாழ்வளிக்கும் திட்டங்கள் இல்லை. காரணம், அரசாங்கம் நமது இல்லை!

முன் இதழில் கனிச்செல்வங்களைக் கண்டோம். இனி கருநாடகத்தின் மற்ற வளங்களைப் பார்ப்போம்.

ஆறு இல்லை, அதனால் அணைக்கட்டுகள் இல்லை. நீரில்லை, அதனால் மின்சாரத் திட்டங்கள் இல்லை என்று வடநாட்டு அரசாங்கம் அல்ல; அவர்களுக்கு வால்பிடிக்கும் இந்நாட்டு அமைச்சர்கள் தங்கள், 'திரு'வாய் திறந்து பகரும் காரணங்கள் பல. பாவம்பூகோளம் தெரியாத, நிலநூல் அறியாத, சரித்திரம் படிக்காத, பொதுஅறிவு புரியாத 'அப்பாவி'கள் தாமே இன்று அமைச்சர் என்று அழைக்கப்படுகின்றனர். எப்படியோ தப்பித்தவறி, கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் அமைச்சர்களாகி விட்டவர்கள், உண்மை தெரிந்தும் ஊமையர்களாய், இழைக்கப்படும் அநீதியைக் கண்டும் கண்ணற்றவர்களாய், தங்கள் பதவி எங்கு பறிபோய்விடுமோ என்ற அச்சத்தால் தங்கள் வடநாட்டு எசமானர்களுக்கு 'ஆமாம் சாமி'களாக ஆகிவிடுகின்றனர்.

கருநாடகத்தைப் பொறுத்தவரையில் ஆறுகள் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பெல்லாரி மாவட்டத்தில் துங்கபத்திரை ஆறும் அதன் கிளையான ஆகரியும் ஓடுகின்றன. இந்தத் துங்கபத்திரை நதியின்மீதுதான் துங்கா அணைக்கட்டும், துங்கா புனல் மின்சாரத்திட்டமும் போடப்படுகின்றன. தென்னிந்தியாவில் உள்ள பெரிய பல நோக்குத் திட்டங்களில் இதுவும் ஒன்று என்று கருதப்பட்டாலும், இதற்கு என்று செலவிடப்படும் தொகை மற்ற வடநாட்டுப் பல நோக்குத் திட்டங்களைவிட மிக மிகக் குறைவு. இந்தத் திட்டம் இரண்டாவது உலகப்போரின் பின்னர் - வெள்ளையர்கள் நம்மை ஆளும்போதுதான்-நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டது. மைசூர் மாநிலமும், ஆந்திர பிரதேசமும் சேர்ந்து எடுத்து நிறைவேற்றும் திட்டமாகும் இது. ரூ 60 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இதற்கு மொத்தமாக. ஆனால், இந்தியாவிலேயே மிகப் பெரிய பல நோக்குத் திட்டமான பக்ரா நங்கலுக்குச் செலவிடப்படும் தொகை ரூ 170 கோடி ஆகும். பெங்கால், பீகார் மாநிலங்களில் கட்டப்படும் 'தாமோதர் வேலி கார்போரேசன்' எனப்படும் திட்டத்திற்கு செலவிடப்படும் தொகை ரூ 105 கோடியாகும். ஒரிசாவில் கட்டப்படும் இராகுட் அணைக்கு முதல் பகுதியாக ரூ 70.78 கோடி செலவிடப்படும். இரண்டாவது ஐந்தாண்டுதிட்டத்தின் கீழ் ரூ 7.95 கோடி துங்கபத்திராவிற்குச் செலவிடப்படும் என்று தெரிகிறது. ஆனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பக்ரா நங்கலுக்கு ரூ 27.78 கோடியும்; டி. வி. சிக்கு ரூ 10.63 கோடியும், சாம்பல் திட்டத்திற்கு ரூ 37.88 கோடியும், அசாமிலுள்ள உம்ட்ரு திட்டத்திற்கு ரூ 81.97 கோடியும் செலவிடப்படும். மேலும் பம்பாயில் உள்ள கொய்னா திட்டத்திற்கு ரூ 29.00 கோடியும், உ. பி யில் உள்ள ரிகாண்ட் திட்டத்திற்கு ரூ 26.00 கோடியும் செலவிடப்படும். இவைகளில் மிக மிகக் குறைவாகத் துங்கபத்ரா அணைக்கட்டிற்குத் தான் செலவிடப்படுகிறது. அதுகூட இரண்டு மாநிலங்களுக்கும் சேர்த்து (மைசூர், ஆந்திரம்) எனவே ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை, அணைக்கட்டுகளுக்காக, மிக மிகக் குறைவு.குறிப்பாக கருநாடகத்திற்கு; பொதுவாகத் தென்னகத்திற்கு.

சிக்முகளூர் மாவட்டத்தில் உள்ள இலக்கவள்ளிபகுதியில்பத்ராநதியின் மீது கட்டப்படும் அணைக்கட்டுதான் பத்ரா திட்டம். இந்தத் திட்டத்திற்கு ரூ 24.42 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவை தவிர கருநாடகத்தில் கிருட்ணராசசாகர் 1930-ம் ஆண்டில் ரூ 4.50 கோடி செலவிட்டு கட்டப்பட்டது. மற்றவைகளுக்கு மொத்தம் ரூ 7.89 கோடி தான் செலவிடப்பட்டது. இவைகள் எல்லாம் வடநாட்டு அணைக்கட்டு திட்டங்களுக்கு ஒப்பிட்டால் கொசுவைப் போன்றவைதான்.

சராவதி நதிமீது கட்டப்படும் புனல் மின்சாரத் திட்டம் ரூ 22.97 கோடி செலவில் கட்டப்படுகிறது. இதற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ 13.00 கோடி செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கருநாடகத்தில் பயன்படக்கூடிய அளவில் ஓடும் மற்ற ஆறுகள் [illegible] சிமோகாவில் ஓடும் குமுதவதி; வட கனராவில் காளி, கங்காவதி, வரதா, பெலகிரி, அகநாசினி, வெங்கடபுர்; மைசூரில் லட்சுமண தீர்த்தம், கபினி; மண்டியாவில் சிம்சா, ஏமாவதி; கோலாரில் அர்காவதி, சித்ரவதி, பாபாக்னி, உத்தர பினாகினி, தட்சிண பினாகினி, பாலார்; குடகில் பரா பால், குமரதாரா, சிக்முகளூரில் வேதா. அவதி; யேகசி போன்றவை. இவற்றில் சில சிறிய ஆறுகள் என்றாலும் பயன்படுத்தக் கூடிய விதத்தில் பயன்படுத்தினால் நன்மை பல உண்டாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நீர் பாசனத் துறைக்கு மைசூர் மாநிலத்தில் ரூ 19.84 கோடி செலவிடப்பட்டது. மொத்தம் ரூ 558.41 கோடியில் முன்னர் கூறிய அளவுதான் மைசூர் மாநிலத்திற்கு செலவிடப்பட்டது. இந்த ஓரவஞ்சனை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் செய்யப்பட்டது. மூன்றாவது திட்டத்திலும் செய்யப்படும் (படலாம் அல்ல) என்று எதிர்பார்க்கலாம்.

கருநாடக மாநிலத்தில் நிலமடந்தை அளிக்கும் செல்வம் நிறைய இருக்கின்றது, இந்தியாவிலேயே நான்கில் மூன்று பங்கு அளவு காபி கருநாடகத்தில்தான் விளைகிறது. ஏறக்குறைய ஓராண்டிற்கு 32,600 டன் காபிக்கொட்டை கிடைக்கிறது. கருநாடக மாவட்டத்தில் சிக்முகளூர், ஆசன், சிமோகா, மைசூர், தென்கன்ரா, குடகு ஆகிய பகுதிகளில் காபிக்கொட்டை விளைகிறது.விளையும் காபியில் மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மொத்தம் இந்தியாவினின்று 1957-ம் ஆண்டில் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட காபிக்கொட்டை மாத்திரம் ரூ 7.73 கோடி ரூபாய் மதிப்பு பெறும். இதில் முக்கால்வாசிக்குமேல் கருநாடகத்தைச் சேர்ந்த காபிக் கொட்டைதான்.

அடுத்தாக, புகையிலை கருநாடக மாநிலத்திற்கு நல்ல வருவாயை அளிக்கிறது. இந்தியாவில் புகையிலை விளைச்சலில் கருநாடகம் ஐந்தாவது இடத்தை வகிக்கிறது. புகையிலையிலே உயர்தரமானது எனக் கருதப்படும் 'விர்சீனிய' புகையிலை 7.600 ஏகர் நிலத்தில் இங்கு விளைவிக்கப்படுகிறது. ஏறக்குறைய 50.30 பவுண்டுகள் பெறுமான புகையிலை இங்கிருந்து வெளியே செல்கிறது. புகையிலையைப் பொறுத்தவரை பெருமளவிற்குத் தென்னகம்தான் விளைச்சல் கொடுக்கிறது. இந்தியாவின் புகையிலை விளைச்சலில் 40 சத வீதம் ஆந்திராவும், மீதி சென்னை, மைசூர், [illegible] வங்காளமும் பங்கு கொள்கின்றன. புகையிலையின் மூலம் வெளிநாட்டு ஏற்றுமதியில் ஏறக்குறைய ரூ 11.59 கோடி கிடைக்கிறது. இவை பெரும்பாலும் தென் மாநிலங்களைச் சாரும்.

மேலும் கரும்பு, அரிசி, கடலைக்காய், கேழ்வரகு, சோளம், கம்பு போன்றவையும் கருநாடகத்தில் அபரிமிதமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன. குடகுப் பகுதியில் ஆரஞ்சு நிறைய விளைகிறது. மைசூர் என்றால் சந்தன சோப் கவனம்வரும். அதற்கு மிகத் தேவையான சந்தன மரம் ஏராளமாக இருக்கின்றது. கருநாடகத்தில் இவைமட்டுமல்லாமல் எண்ணெய்க்கு வேண்டிய பொருள்களும், கொள்ளு, கிராம்பு ஏலம் போன்ற பொருள்களும் விளைகின்றன. மற்ற விளை பொருள்களும் ஏராளமாக விளைகின்றன.

மீன் பிடிக்கும் தொழிலும் கருநாடகத்தின் பல முக்கியத் தொழில்களில் ஒன்றாக இருக்கிறது. ஏறக்குறைய ஓராண்டிற்கு ரூ 300 இலட்சம் பெறுமானம் மீன் பிடிக்கப்படுகிறது. இந்த மீன் பிடிக்கும் தொழிலில் 20,000 பேர்வரை ஈடுபட்டிருக்கின்றனர். இதில் ரூ 83 இலட்[illegible] பெறுமான மீன்கள் ஏற்[illegible] செய்யப்படுகின்றன. நல்ல மு[illegible]யில் மீன் பிடிப்புத் தொழி[illegible] சீர்திருத்தி விரிவாக்கினால் நிறை[illegible] ஏற்றுமதி செய்யமுடியும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மீன் பிடிப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டது ரூ 12 கோடியாகும். ஆனால், கருநாடக மாநிலத்திற்கு கிடைக்கப் போவது என்னவோ ரூ 75 இலட்சம் தான். இந்த எழுபத்தைந்து இலட்சத்தில் என்ன சீர்திருத்தம செய்து, என்ன முன்னேற்றம் செய்துவிட முடியும்? தெரியவில்லை!

பட்டு என்றால் மைசூரும், மைசூர் என்றால் பட்டும்தாம நினைவிற்கு வரும் பாவையர்களுக்கு. பளிங்குநிற மேனிப் பாவையர் பாங்குற விளங்க அணியும் பட்டு, பெருமளவில் மைசூரில்தான் கிடைக்கின்றது. ஏறக்குறைய ஓராண்டிற்கு மைசூர் 18.65 இலட்சம் பவுண்டுகள் பட்டு நூல் தயாரிக்கின்றது. இது ஏறக்குறைய ரூ 527 இலட்சம் வருவாய் அளிக்கின்றது. இந்தியாவின் பட்டுத் தயாரிப்பில் மூன்றில் இரண்டு பங்கிற்குமேல் மைசூரில் தான் தயாரிக்கப்படுகிறது.

கருநாடக மாவட்டத்தில் ஏறக்குறைய இருபது துறைமுகங்கள் இருக்கின்றன இவற்றில் பெரியது என்று சொல்லக்கூடியது, மங்களூர் துறைமுகம் ஒன்றுதான். இந்தத் துறைமுகத்தை, வெகு நாட்களாக, விரிவாக்க வேண்டும் என்று மைசூர் அரசாங்கம் வற்புறுத்தி வந்ததன் பேரில் மத்திய அரசாங்கம் ரூ 10 கோடி செலவு செய்து விரிவு செய்வதாக இசைத்துள்ளது. இதுமட்டுமில்லாமல் கார்வார் துறைமுகத்தை விரிவாகச் செய்ய மாநில அரசு தீர்மானித்துள்ளது. இதுபற்றி மத்திய அரசினிடம் மைசூர் மாநில அரசாங்கம் கலந்து பேசியுள்ளது. வழக்கம் போல் வஞ்சகம் செய்யுமா? இல்லை, வாழ்வளிக்க வகை செய்யுமா வடவராட்சி? இதைப் பொறுத்துத் தான் பார்க்க வேண்டும்.

திராவிட நாட்டின் ஓர் அங்கமாகத் திகழும் கருநாடகத்தில் இவ்வளவு வளங்கள் இருக்கின்றன. ஏன் பிரிந்து வாழமுடியாது?

வளமில்லா நாடுகளும், சிறுசிறு நாடுகளும் உலகில் வாழ்கின்றனவே! கருநாடகத்தில் காணப்படும் வளங்களைவிட மிக மிகக் குறைந்த-ஏன் பத்தில் ஒரு பங்கு கூட இல்லாத நாடுகள் இன்று உலகில் எத்தனை சுதந்திரமாக வாழ்கின்றன. வளங்கள் பல கொண்ட கருநாடகம் மட்டும் பிரிந்து போனால் வாழாதா?

வாழாது என்று வஞ்சக நெஞ்சும், வறட்டுக் குணமும் கொண்டவர்கள்தான் சொல்லுவர். தனியாகப் பிரிந்து திராவிடக் குடியரசின் கீழ்க் கருநாடகம் இயங்கினால் சீருடனும் சிறப்புடனும், உலகில் சிறந்த நாடாகவும் வாழும் என்பதில்எள்ளளவும் சந்தேகமில்லை.

வாழ்க கருநாடகம்! வருக திராவிடம்!

—இரா. மதனகோபால்
பி. காம்., டி. ஐ. பி.

கருவாடு விற்கிறார் காமராசர்!

அண்மையில் நடந்த மீனவர் கூட்டம் ஒன்றில் காமராசர் இப்படிப் பேசினார்: "தூத்துக்குடியிலே, மீனைப் பிடித்துக் கருவாடாக்கி, சிலோனுக்கு அனுப்பறுங்க. கொள்ளை லாபம்! லட்சம் லட்சமாச் சம்பாதிக்கிறுங்க. நீங்களும் ஏராளமா மீன் பிடிங்க. நம்ம சர்க்காரும் வேண்டிய வசதி எல்லாம் பண்ணித்தரும். இங்கே செலவாகிற மீன் போக மீதியை வெளிநாட்டுக்கனுப்பலாம். சர்க்காருக்கும் பணம் கிடைக்கும். உங்களுக்கும் நல்வாழ்வு வரும்!"

அண்ணா இறைச்சிக் கடை வைக்கச் சொன்னபோது கேலி செய்தார் காமராசர். இப்போது மீன் விற்கச் சொல்கிறார்.

நரம்பில்லாத நாவுக்கரசர்கள் இவர்கள்தான்!

(அவர் பேச்சுப்பற்றிய பிற விவரம் 8-ம் பக்கம்)

லந்தின் அழகு ரதம்!

ய நக்கு எளிய விலையில் கிடைக்கக்கூடிய சிறிய கார்களை உற்பத்தி செய்வதுபற்றி இந்திய அரசாங்கம் யோசனை செய்து வரு து. இதைப்பற்றி ஆராய்வதற் ன திரு சாவின் தலைமையில் ஒரு து ழுவையும் நியமித்திருக்கிறது. இந்த யில் ஆலந்து நாடு சொந்தமாகச் றிய கார் தயாரித்த கதையைத் தெரிந்துகொள்ளலாம்.

இருபத்தெட்டே வயது நிரம்பிய ஊப் வான் டூர்னே, மதுவகைத் தயாரிப்பவர் ஒருவரிடமிருந்து வாங்கிய ஆயிரம் பவுனை மூலதனமாக வைத்து 1928-ல் டி. ஏ. எஃப் தொழிற்சாலையைத் தொடங்கினர். கிராமக் கருமானின் புதல்வரான அவர், முதலில் சிறிய இயந்திரத் தொழிற்சாலை ஒன்றில் நிர்வாகியாக இருந்தார். பின்னர் சொந்தமாக இதைத் தொடங்கினர்.

அவரும் அவரது சகோதரரான விம் என்பவரும் தமது சிறிய 'மெக்கானிக்' தொழிற்சாலையைத் தொடங்கினர்கள். ஊப்பின் தொழில் நுட்பத் திறனும், புது வகைகளைத் தயாரிக்கும் திறனும், விம்மின் வியாபார தந்திரமும் சேர்ந்து அந்தத் தொழிற்சாலையைப் பெருமளவுக்கு வளர்த்துவிட்டன. 1940 முதல் 45 வரை உலகப் போர் நடந்தபோது மட்டுமே அந்தத் தொழிற்சாலை உறங்கிக் கிடந்தது. மற்ற எப்போதுமே அது மூடிக் கிடந்ததுமில்லை; வளராமல் நின்றதுமில்லை.

1930-ல் முதலில் 'டிரெயிலர்' வண்டிகளை அவர்கள் உற்பத்தி செய்தார்கள். 1935-ல் பல புதிய வகைகளையும் செய்துமுடித்தார்கள். அவற்றில் தானுக இயங்கும் ஐந்தாவது சக்கரமும், நடுவில் இருப்பு 'பீம்' கொண்ட சாசிசும் அமைந்திருந்தன.

இத்தகைய வண்டிகளில் பொது மக்களுக்கு அதிக ஆர்வமுண்டாயிற்று ஆகவே அதிகமாக 'ஆர்டர்' கள் வந்து குவியலாயின. இத்தகைய வண்டிகளைத் தயாரிக்கும் 'லைசென்சு' களை வெளிநாடுகள் பலவற்றிற்கு அவர்கள் விற்றுர்கள்; அவர்கள தொழிற்சாலையும் வளர்ந்தது. சில காலத்துக்குள் வேறுபல புதிய கருத்துக்களும் போக்குகளும் இணைந்ததால், ஆலந்திலேயே மிகப் பெரிய 'டிரெயிலர்' தயாரிக்கும் தொழிற்சாலையாக டூர்னே தொழிற்சாலை விளங்கியது.

1936-ம் ஆண்டில் நெதர்லந்து அரசாங்கமும் நெதர்லந்து கிழக்கிந்திய இராணுவமும் இந்தத் தொழிற்சாலையைப் புதிய வகை வண்டிகள் பலவற்றையும், வியாபாரத்துக்குதவும் சாதாரண 'டிரக்கு' களை, காடு மலைகளில் செல்லும் வண்டிகளாக மாற்றுவதற்கான வழியையும் கண்டுபிடித்துச் செய்யுமாறு கூறின. குறிப்பிட்ட எல்லாத் தேவைகளையும் ஈடு செய்யும் ஆயுத வண்டி ஒன்று திட்டமிடப்பட்டுத் தயாராகியது.

அடுத்து, இரயில் போக்குவரத்தில் சரக்குகளை எளிதில் ஏற்றவும் இறக்கவும் வசதியாயுள்ள பல வண்டிகள் தயாராயின. அதற்கென லைசென்சு பெற்றுள்ள பிற நாடுகளிலும் இத்தகைய வண்டிகள் தயாராகின்றன. இவ்வகை வண்டிகள் ஆலந்திலும் பிற நாடுகளிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

போர்க் காலத்தில் தொழிற்சாலை மூடிக் கிடந்ததுபோது, வியாபாரத்துக்கு உதவும் வண்டிகளைத் தயாரிப்பதுபற்றி அவர்கள் யோசனை செய்தார்கள். போர் முடிந்த சில காலம் வரையில் புதிய தொழிற்சாலை எதையும் தொடங்க முடியவில்லை. 1949-ல் புதிய தொழிற்சாலை உருவாயிற்று. அந்த நேரத்தில் என்சின்கள், அக்சில்கள், வேறு முக்கியப் பகுதிகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாயின. என்றாலும் டி ஏ எஃப் படிப்படியாக அவற்றைத் தானே செய்யத் தொடங்கியது. இப்போது, முற்றிலும் அந்தத் தொழிற்சாலையில் தயாரான கருவிகளைக் கொண்டே வண்டிகள் கட்டப்படுகின்றன

லேலண்ட்' என்சின்களை உற்பத்தி செய்யத் தொடங்கியது. முதலில் இதை உற்பத்தி செய்வதற்கென லைசென்சு பெற்றது பிறகு, டிஏஎஃப்பின் சொந்த என்சின்களில் பலவகைகளும் தயாரான.

1950-ம் ஆண்டுக்குப் பிறகு டிஏஎஃப் தொழிற்சாலையின் பல பகுதிகள் புதிய அம்சங்கள் பலவற்றைக் கொண்ட சிறிய கார் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டன. அந்தக் கார்கள் இப்போது முழு அளவில் உற்பத்தியாகின்றன. டிஏஎஃப் 600 என்ற இந்த வகைக் கார்கள் ஆலந்தில் நன்கு விற்பனையாயின. பாரிசு, இலண்டன், நியூயார்க் முதலிய

வாழ்க! வாழ்க!

கடந்த 2-5-60 அன்று காலை ஏ. வி. எம். ஸ்டுடியோவில் திரு. சரவணன் அவர்கள் திருமதி முத்துலட்சுமியையும், திரு. குமரன் அவர்கள் திருமதி பத்மாவதியையும் தம் வாழ்க்கைத் துணைவியராக ஏற்றனர். திரு. ஏ. வி. மெய்யப்பரின் குமாரர்கள் ஆவர், திருவாளர்கள் சரவணனும் குமரனும்.

திருமணத்திற்குக் கலையுலகப் பெருமக்கள் பலரும் வந்து வாழ்த்தினர்.

தென்றலின் வாழ்த்துக்களும் உரித்தாகுக. வாழ்க! வாழ்க!

1951-ல் இராணுவ வண்டிகள் தயாரிக்கப்பட்டன. மூன்று டன் பீரங்கித் தாங்கி, ஒரு டன் ஆயுதம் தாங்கி வண்டிகள் அப்போது உருவாயின. எத்தகைய தரையிலும் செல்லக்கூடிய தன்மை வாய்ந்தவை அவை.

பின்னர், எப்போதும் இராணுவ 'ஆர்டர்'களையே நம்பியிருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆகவே பொது மக்களுக்கு வேண்டிய வண்டிகளைத் தயாரிப்பதில் அவர்கள் முழு கவனம் செலுத்தினர்கள். ஆலந்திலேயே, அவற்றின் விற்பனை அதிகமாயிற்று. ஐரோப்பிய, ஆப்ரிக்க, தென் அமெரிக்க நாடுகளுக்கும் அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. 1957-ம் ஆண்டு வரையில் பிரித்தானிய பெர்சின்சு, அமெரிக்கன் எர்குலிசு போன்ற என்சின்கள் அந்த வண்டிகளில் பொருத்தப்பட்டு வந்தன. அதே ஆண்டில் டி ஏ எஃப் தொழிற்சாலை 'பிரித்தானிய

நகரங்களில் நடைபெற்ற சர்வதேசப் பொருட்காட்சிகளிலும் அவை அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன.

அந்தக் காரை இயக்குவதை எளிதாக்கும் வேரியமாடிக் ஆடோமாடிக் டிரான்ஸ்மிசன் என்பதால்தான் அ இவ்வளவு பெருமை நான்கு பேர், தமது சாமான்களுடன் தாராளமாக உட்கார இடமுண்டு. கவர்ச்சியான தோற்றம்; குறைந்த செலவு குறைந்த விலை ஆகியவற்றால் இன்னும் பெயரடைந்திருக்கிறது

டிஏஎஃப் தொழிற்சாலையில் இப்போது இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஐந்தோவனில் உள்ள ஒரு பிரிவு டிரெயிலர்கள், செமிடிரெயிலர்கள், டாங்கிகள் போன்ற விசேட வண்டிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கிறது. இவற்றில் பெரும்பகுதி ஆலந்து நாட்டிலேயே விற்பனையாகின்றன. டாங்கிகள் போன்றவை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. பெரிய எண்ணெய்க கம்பெனிகள் அவற்றைப் பயன்படுத்துகின்றன.

டி ஏ எஃப் தொழிற்சாலையின் கார், டிரக் உற்பத்திப் பிரிவு 6,50,000 சதுர மீட்டர் நிலப் பரப்பில் அமைந்திருக்கிறது. இராணுவ வண்டிகளின் உற்பத்தி குறைந்து வருகிறதென்றாலும், வர்த்தகத்துக் குதவும் வண்டிகளின் உற்பத்தி அதை ஈடு செய்கிறது. ஆலந்திலும் வெளி நாடுகளிலும் இவை பெருமளவில் உற்பத்தியாகின்றன. ஒரு மணி நேரத்தில் மூன்று வண்டிகள் இங்கே தயாராகின்றன.

நெதர்லந்தில் மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்குவது இலாபகரமானது அல்ல என்பதை கடந்த பத்தாண்டுகள் பொய்யாக்கிவிட்டன. கார்களை ஆலந்திலும் வெளி நாடுகளிலும் விற்பனை செய்யலாம் என்ற டூர்னே சகோதரர்களின் கருத்து உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது தடையற்ற போட்டிதான் மோட்டார் உற்பத்தித் தொழிலை வலிவுடையதாக்கி, ஏற்றுமதிக்கு வழி செய்யும் என்று டூர்னே சகோதரர்கள் கருதுகிறர்கள். ஆகவே தான் டி ஏ எஃப் தொழிற்சாலை தனக்குச் சாதகமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று ஆலந்து அரசாங்கத்தை இதுவரை கேட்கவில்லை.

இப்போது அந்தத் தொழிற்சாலையில் நாலாயிரம் பேர் வேலை செய்கிறர்கள். நாளொன்றுக்கு இருநூறு கார்களை உற்பத்தி செய்வது என்ற நிலையை எட்டும்போது அங்கே ஐயாயிரம் பேர் வேலை செய்வார்கள்.

ஆலந்திலுள்ள மற்ற பெருந் தொழில்களைப்போலவே டி ஏ எஃப் புக்கும் ஒரு வசதியுண்டு. அந்தத் தொழிற்சாலையிலோ, அல்லது அதற்கு வேண்டிய சருவிகளைத் தயாரித்துத் தரும் மற்ற தொழிற்சாலைகளிலோ இதுவரை வேலை நிறுத்தம் ஏற்படடதில்லை. எல்லா டச்சுத் தொழில் நிலையங்களையும் போலவே இங்கும் தொழிலாளர் முதலாளி உறவு நல்ல முறையில் அமைந்திருக்கிறது கடந்த முப்பதாண்டுகளில் டிஏஎஃப் தொழிற்சாலையில் எந்த விதமான தொழிலாளர் தகராறும் ஏற்பட்டதில்லையென்பது மற்ற நாட்டவர்களுக்கு வியப்பளிக்கும்! இதை ஒரு சாதனை என்று கருதுவதைவிட, இநதரப்பினரும் கொண்டுள்ள நல்ல பொது அறிவே இதற்கு அடிப்படையாகும் எனலாம் என்பதாக டூர்னே சகோதரர்கள் நினைக்கிறர்கள். ★

பொதுவாகவே, இப்போதைய உத்தரவினுல் நாட்டுக்கு நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம். இந்திபோன்ற ஒரு வளராத மொழியை ஆட்சி மொழியாக்குவது மிகவும் சிக்கலான வேலை. சர்க்காரிலுள்ளவர்கள் பலருடைய நேரத்தையும் சக்தியையும் இந்த முயற்சி வீணுக்கிவிடும். அரசாங்க இலாக்கா ஒவ்வொன்றிலும் பல சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும். ஒவ்வொரு தஸ்தாவேஜையும் பட்டியலையும் அறிக்கையையும் ஆங்கிலம், இந்தி என்று இரண்டு மொழிகளில் தயாரிப்பது இரட்டிப்பு வேலையல்லவா? ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது, அவற்றில் எழும் பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்று சிந்தனை செய்ய வேண்டிய சர்க்கார் அதிகாரிகள் அனைவரும் சிறு பிள்ளைகள்போல் தேவநாகரி உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் கற்பதில் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கும். அரசாங்க ஊழியர்களின் சக்தி இவ்வாறு வீணுக்கப்படுவது நாட்டின் நலனுக்கு உகந்ததாகத் தோன்றவில்லை.

—ஆனந்தவிகடன் 15-5-'60.

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

அன்றைய இரவு அவனுக்குஅமைதியாய்க் கழிந்தது. கொட்டும் பனியைக் கூட நினைக்காது அமைதியாய்-சஞ்சலச் சிந்தனை எதுவுமின்றி உறங்கினுன். கனவுலக இன்பம் அவனைத் தழுவியது.

இப்போது சலனம் ஏதும் இல்லை, அவன் மனதில். நிர்மலமான நில வானம் ஆனது அவன் உள்ளம். இவ்வளவு அனுபவங்களையும் பெற்ற அவன் தான் இந்தியத் துணைக் கண்டத்தை முதன் முதலில் தாக்கிய இசுலாமிய மன்னனுன முகமது கசினியின் தந்தை சபுக்டசின்.

—மா. பாண்டியன்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு. தொலைபேசி எண் 83510.